விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலியாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 09 வியாழக்கிழமை (23.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 35

## யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி

# இராணுவச் சிப்பாயால் கழுத்தறுத்து படுகொலை



### யாழ். பண்ணைக்கடற்கரையில் பட்டப்பகலில் கோரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தில் கல்வி கற்கும் சிங்கள மாணவி ஒருவர் இராணுவச் சிப்பாயால் கழுத்தறுத்துப்படுகொலை செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரையில் பட்டப்பகலில் மேற்படி கோரச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடிவந்த

### மற்றுமொரு தந்தை முல்லையில் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடிவந்த மற்றுமொரு தந்தை நேற்று முல்லைத்தீவில் உயிரிழந்துள்ளார். மல்லாவி ஜெயந்தி நகர் நமனங்குளத்தை சேர்ந்த வேலுப்பிள்ளை பாலச்சந்திரன் (வயது 68) என்ற குடும்பஸ்தரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இறுதி யுத்தத்தின் போது தனது மகனை இராணுவத்திடம் ஒப் படைத்திருந்தார். 23

### மனைவியை கழுத்தறுத்து கொன்ற பின்

## முகம் கழுவி, தண்ணீர் குடித்துவிட்டு சாதாரணமாக சென்ற கொலையாளி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி நேற்று அவரது கணவரான இராணுவச் சிப்பாயால் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

படுகொலை செய்த பின் குறித்த இராணுவச் சிப்பாய் பண்ணைக் கடற்கரையில் இருந்த குடிநீர் தாங்கியில் நீர் அருந்திவிட்டு முகம் கழுவி விட்டு சாதாரணமாக சென்று பஸ் தரிப்பிடத்தில் நின்ற போது பொது மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டார். (ம-3)

## 5 இறுவெட்டுக்களை பாராளுமன்றில் சமர்ப்பித்தார் ரஞ்சன்

(கொழும்பு)

தொலைபேசி கலந்துரையாடல்கள் அடங்கிய 5 இறுவெட்டுக்களை பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு பாதகமான இறுவெட்டுக்களை நேற்று 23

## இலங்கைக்கு எதிரான ஐ.நாவின் தீர்மானத்தை ஏற்க போவதில்லை

### அரச பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானங்களில் 2015 ஆம் ஆண்டில் இருந்து ராஜபக்ஷக்கள் இருந்த நிலைப்பாட்டில் தற்போது எவ்வித மாற்றங்களும் கிடையாது எனத் தெரிவித்த அரசாங்க பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, சர்வதேசத்தில் எமது நாட்டின் அரசியலமைப்பிற்கு முரணான தீர்மானங்களுக்கு ஒரு 23

## 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம் 14 பேருக்கு அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் சந்தேகநபர்கள் 13 பேரையும் நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அவர்களை நாளை வெள்ளிக்கிழமை நிரந்தர நீதாய மேல் நீதி மன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

2008 மற்றும் 2009காலப் பகுதியில் கொழும்பில் வைத்து 11 இளைஞர்களை கடத்திச் சென்று தடுத்து வைத்து அவர்களை கொலை செய்ததாக முன்னாள் கடற்படை தளபதி மற்றும் 13 பேர் மீது சட்டமா அதிபர் திணைக்களம் குற்றம் சாட்டியிருந்தது. (ம-3)

## கத்திக்குத்து காயத்துடன் ஆணின் சடலம் மீட்பு

### சந்தேகத்தில் பெண்ணொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கழுத்து மற்றும் நெஞ்சுப்பகுதியில் ஆழமான கத்திக்குத்து காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். படித்த மகளிர் திட்டம், எழுதுமட்டுவாள் வடக்குப் பகுதியில் இவ் 23

### முகமூடி அணிந்து காரில் வந்தவர்களால்

## பேருந்துக்காக காத்திருந்த பெண்ணின் தாலிக்கொடி அறுப்பு

### பூநகரி பள்ளிக்குடாவில் சம்பவம்

(கரணவாய்)

பேருந்துக்காக காத்திருந்த பெண்மணி ஒருவரின் பத்தரைப் பவுண் தாலிக் கொடி முகமூடி கொள்ளையர்களினால் கத்தி முனையில் கொள்ளையிட்டு செல்லப் 23

## 19ஆவது திருத்தச்சட்ட மூலத்தை அரசு இல்லாமல் செய்ய முயற்சிப்பது ஏன்?

### லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி

(கொழும்பு)

19 ஆவது திருத்தச்சட்டத்தை எந்த நோக்கத்திற்காக அரசாங்கம் இல்லாது செய்ய முற்படுகிறது என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர் 18 ஆவது திருத்தச் சட் 23

## நோர்வே தூதரக அதிகாரிகள் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸை இலங்கைக்கான நோர்வே தூதுவர் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் குழு நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

வடக்கின் முதலாவது பெண் ஆளுநர் என்றவகையில் நோர்வே தூதுவர் 23



## ஸ்ரீ மகா காளி அம்மன் தேவஸ்தானம்

**இயக்கச்சி , வாழைத்தோட்டம்**

# சனீஸ்வர ஹோமம்

**24.01.2020**

அடியவர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் மகா காளி அம்மன் ஆலயத்தில் நாளை (24.01.2020) வெள்ளிக்கிழமை திருக்கணித பஞ்சாங்கப்படி சனிப்பெயர்ச்சி இடம்பெறுகின்ற அன்றைய தினத்தில் காலை 8.00 மணி முதல் சனீஸ்வர பகவான் ஹோமம், விசேட திரவிய அபிஷேகங்கள், ஆராதனைகள், வேத ஸ்தோத்திர, திராவிட பாராயணம் என்பன இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து அடியவர்களுக்கு விபூதிப் பிரசாதம், மகேஸ்வர பூசை வழங்கப்படும்.

அனைத்து அடியவர்களும் ஆலயத்தில் பெயர்களையும் நட்சத்திரங்களையும் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஆலய நிர்வாகம்**
**ஸ்ரீ மகா காளி அம்மன் தேவஸ்தானம்**

(1968)

# கண்ணீர் அஞ்சலி



யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் எம்முடன் அரும்பணியாற்றிய ஆசிரிய நண்பி

அமரர் செல்வி
## குகனேசமலர் பொன்னுத்துரை

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகனை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**முன்னைநாள் அதிபர், ஆசிரிய நண்பர்கள்**
(இ) யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி, உரும்பிராய்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 08 - 1939



மறைவு
22 - 01 - 2020

## திருமதி தெய்வசிகமாணி நாகரத்தினம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் புதுவீதி, ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வசிகாமணி நாகரத்தினம் நேற்று (22.01.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - இரத்தினம் தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற செல்வநாயகம் தெய்வசிகாமணியின் அன்பு மனைவியும் கருணாகரன், காலஞ்சென்ற மாலினி மற்றும் கிருபாகரன், கஜேந்திரன் (சுவிஸ்), கமலராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்தானலட்சுமி, காலஞ்சென்ற நேசராசா மற்றும் நாகரஞ்சினி, சாந்தகௌரி (சுவிஸ்), யோகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், மகேஸ்வரி, நடராசா, சதாசிவம் மற்றும் மங்கையற்கரசி, காலஞ்சென்ற பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கவிதா, விபுசன், ஜனார்த்தன், கோபிகா, கார்த்திகா (சுவிஸ்), சரணி (சுவிஸ்), சந்தியா (சுவிஸ்), சுஜேகா, மயூரகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


இல.6, புதுவீதி,
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (1963)

தகவல்:
குடும்பத்தினர்

A tribute to

# Dr. Mohan Sivarajaratnam

*Consultant Anesthetist & Critical Care*
*North Middlesex University Hospitals, UK*
*&*
*President, JMFOA, UK Chapter*



The ALUMNI, Faculty of Medicine, Jaffna is deeply saddened by the demise of Dr.Mohan Sivarajaratnem who is beloved by our ALUMNI and friends. We grieve with our entire ALUMNI family over the passing away of this altruistic leader who has contributed to our community more than any others.

You will always be remembered by the people to whom you devoted your precious life. We extend our deepest sympathies to the bereaved family members.

Alumni Members are kindly requested to attend the memorial event at 3.30 pm on 23.01.2020 at the Board Roam, Faculty of Medicine, Jaffna

**The ALUMNI, Faculty of Medicine, Jaffna**

(1960)


## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

union assurance
Trust in your tomorrow, today.

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள் யாழ்.பிராந்தியம்

◎ முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்

**முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**

- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**

- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்**

- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 25,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்



(C-9033)

உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 25.01.2020க்கு முன்னர் sellaiyakiritharan89@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

218, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# "சின்னம் ஒரு பெரிய விடயமல்ல"

# வலுவான கூட்டணியே அவசியம்

## சு.க.பேச்சாளர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**பொதுத் தேர்தலில் போட்டியிடும்போது சின்னம் ஒரு பெரிய விடயமாகாது. வலுவான கூட்டணியே முக்கியமானது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளக பிரச்சினைகள் இழுபறி நிலையில் காணப்படுவது தமது வெற்றிக்கு சாதகமாகவே அமைகின்றது என்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலின் போது கிடைக்கப்பெற்ற வாக்குகளை விட அதிகமான வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் சுதந்திரக்கட்சி பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதற்கமைய தேர்தலை வெற்றி கொள்வதற்காக புதிய அமைப்பாளர்களை நேற்று முன்தினம் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நியமித்தார். தற்போது அவர்களுக்கு தமது பகுதிகளில் உள்ள மக்களை தெளிவுபடுத்துவது தொடர்பிலும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

சில பகுதிகளில் தேர்தலை இலக்காக வைத்து தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவதாக விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது. இவ்வாறான படிவங்களை அரசாங்கத் தரப்பினர் ஒரு போதும் விநியோகிக்குமாறு தெரிவித்ததில்லை. இதனால் அரசாங்கம் இதுவரையில் வென்றுள்ள நற்பெயருக்கு களங்கம் ஏற்படும். சாதாரண தரத்தில் சித்தியடையாதவர்கள் ஒரு இலட்சம் பேருக்கு தொழில்வாய்ப்பு பெற்றுத்தருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆனால் அதற்கான விண்ணப்பப்படிவங்களை நாங்கள் வழங்கவில்லை.

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக கூட்டணி அமைப்பது தொடர்பில் இன்னும் கலந்துரையாடப்படவில்லை. எதிர்வரும் இரு வாரங்களுக்கு பின்னர் இந்த விடயம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும். பொதுக் கூட்டணியின் சின்னம் தொடர்பில் தற்போது பேசப்படுகின்றது. தேர்தலில் வெற்றி பெறுவதற்கு சின்னம் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தாது. தேர்தலின் வெற்றிக்கு கட்சியே முக்கிய பங்கினைப்பெற்றுக் கொடுக்கும். இதனால் முதலில் வலுவான கூட்டணியொன்றை அமைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதற்குப் பொருத்தமான சின்னத்தை தெரிவு செய்து கொள்ளலாம்.

தாமரை மொட்டு அல்லது கை பொதுச் சின்னமாக அறிவிக்கப்பட்டால், அது இனிவரும் காலங்களில் பொதுச் சின்னமாகவே கருதப்படும். ஒரு தனிப்பட்ட கட்சிக்கு உரிமை கோர முடியாது. அதனால் சின்னம் தொடர்பில் பொதுக் கூட்டணியில் இணையப்போகும் கட்சிகளுடன் பேசித் தீர்மானம் எடுக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித், அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையில் எம்.சி.சி, எட்கா மற்றும் சோபா ஒப்பந்தங்களை கிழித்தெறிய வேண்டும் என்றும் அதற்கு பெரும்பான்மையை பெற்றுத் தருவதாகவும் தெரிவித்து வருகின்றார். ஆனால் அவர்களது ஆட்சிக்காலத்தின் போதே இந்த ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்பதை அவர் தற்போது மறந்துபோயுள்ளார். இந்த எதிர்ப்பை அவர் முன்னரே காண்பித்திருந்தால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கும். தற்போது இவர்களது கட்சிக்குள் காணப்படும் தலைமைத்துவம் தொடர்பில் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல், ஏனைய ஒப்பந்தங்கள் தொடர்பில் தலையிடுவதால் எந்தப் பயனும் ஏற்படாது.

இந்நிலையில் ஐ.தே. கவின் உள்ளகப் பிரச்சினைகளின் இழுபறி நிலைமைகள் தொடர்ந்தும் காணப்படுமாயின் அது எமது வெற்றிக்கு சாதகமாக அமையும். ஐ.தே.க. மூன்று தலைமைத்துவத்தின் கீழ் பிரிவதற்கு வாய்ப்புள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனநாயகம் நிலவும் நாடுகளில் இலங்கைக்கு 69 ஆவது இடம்

(லண்டன்)

ஜனநாயகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 69 ஆவது இடத்தில் உள்ளதாக இங்கிலாந்திலுள்ள "Economist Group" மேற்கொண்ட ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டது.


ஜனநாயகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும் 167 நாடுகளை வைத்து 2019 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்விலேயே இலங்கையானது பத்துக்கு 6.27 புள்ளிகளுடன் 69 ஆவது இடத்தைப் பிடித்தது.

இலங்கையானது கடந்த 2006 ஆம் ஆண்டு 6.58 புள்ளிகளையும் 2008 இல் 6.61 புள்ளிகளையும் 2010 இல் 6.64 புள்ளிகளையும் 2011 இல் 6.58 புள்ளிகளையும் 2012 இல் 5.75 புள்ளிகளையும் 2013 இல் 5.69 புள்ளிகளையும் 2014 இல் 5.69 புள்ளிகளையும் 2015 இல் 6.42 புள்ளிகளையும் 2016 இல் 6.48 புள்ளிகளையும் 2017 இல் 6.48 புள்ளிகளையும் 2018 இல் 6.19 புள்ளிகளையும் பெற்றிருந்தது.

இந் நிலையில் இப் பட்டியலில் நோர்வே (9.87) முதல் இடத்திலும் ஐஸ்லாந்து (9.58) இரண்டாம் இடத்திலும் சுவீடன் (9.39) மூன்றாம் இடத்திலும் நியூசிலாந்து (9.26) நான்காம் இடத்திலும் பின்லாந்து (9.25) ஐந்தாம் இடத்திலும் அயர்லாந்து (9.24) ஆறாவது இடத்திலும் டென்மார்க் (9.22) ஏழாவது இடத்திலும் கனடா (9.22) எட்டாம் இடத்திலும் அவுஸ்திரேலியா (9.09) ஒன்பதாம் இடத்திலும் சுவிட்ஸர்லாந்து (9.03) பத்தாம் இடத்திலும் உள்ளது.

இதேவேளை இந்தப் பட்டியலில் வடகொரியா (1.08) 167 ஆவது இடத்திலும் கொங்கோ (1.13) 166 ஆவது இடத்திலும் மத்திய ஆபிரிக்க குடியரசு (1.32) 165 ஆவது இடத்திலும் சிரியா (1.43) 164 ஆவது இடத்திலும் சாட் (1.61) 163 ஆவது இடத்திலும் துருக்மெனிஸ்தான் (1.72) 162 ஆவது இடத்திலும் ஈக்குவடோரியஸ்சினி (1.92) 161 ஆவது இடத்திலும் தஜிகிஸ்தான் (1.93) 160 ஆவது இடத்திலும் சவுதி அரேபியா (1.93) 159 ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.தே.க.எம்.பி. ஜயம்பதி இராஜினாமா!



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார்.

ஜயம்பதி விக்கிரமரத்ன தனது இராஜினாமா கடிதத்தை சபாநாயகரிடம் ஒப்படைத்தார் என, பிரதி சபாநாயகர் நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை அறிவித்துள்ளார்.

ஜனவரி 20. 2020 முதல் அமுலாகும் வகையில் தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசியப் பட்டியல் ஊடாக அவர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இவர் அரசியலமைப்பு, சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை, உள்ளக நிர்வாகம், அரச முகாமைத்துவம், நல்லிணக்கம் மற்றும் வடக்கையும் கிழக்கையும் மீளக் கட்டியெழுப்புதல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க நேர்முகத்தேர்வு பெப்ரவரி ஆரம்பம்

## அமைச்சர் அமரவீர தகவல்



(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனப் பயணிகள் போக்குவரத்து மின்சக்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டில் 54 ஆயிரம் பட்டதாரிகள் உள்ளதாகவும் அவர்களுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுத் தரும் பொறுப்பினை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் வாரமளவில் இவர்கள் அனைவரும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து அவர்களின் எதிர்காலத்திற்கு தேவையான வேலைவாய்ப்பிற்கு ஏற்ப சிறந்த பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து பட்டதாரிகளினதும் திறமைகளை இனங்கண்டு. அவர்களுக்குத் தேவையான பயிற்சியை அளித்து அவர்களின் கல்வித் திறனை நாட்டின் எதிர்காலத்திற்காகப் பயன்படுத்தும் வேலைத்திட்டதை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மத்தியூஸ் இரட்டைச்சதம் திமுத் படை முன்னிலை

சிம்பாவே அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அஞ்சலோ மத்தியூஸ் இரட்டைச சதம் விளாசியுள்ளதுடன், இலங்கை அணி மொத்தமாக 515 ஓட்டங்களை குவித்து டிக்ளே செய்தது.

சிம்பாவேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியானது சிம்பாவேயுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.



இத் தொடரில் ஹரேயில் ஆரம்பான முதல் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவே அணி முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தனது முதல் இன்னிங்ஸிக்காக 358 ஓட்டங்களை குவித்தது.

சிம்பாவே அணி சார்பில் க்ரெய்க் ஏர்வின் 85 ஓட்டங்களையும், கெவின் கசுஸா 63 ஓட்டங்களையும், ப்ரின்ஸ் மசுவோர் 55 ஓட்டங்களையும் அதிக படியாக பெற்றனர்.

இலங்கை அணி சார்பில் பந்து வீச்சில் லசித் எம்புல்தெனிய 114 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதன் பின்னர் தனது முதல் இன்னிங்ஸ்க்காக துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை அணியானது நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 106 ஓவர்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து 295 ஓட்டங்களை குவித்திருந்தது.

அஞ்சலோ மத்தியூஸ் 93 ஓட்டங்களுடனும், தனஞ்சய டிசில்வா 42 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இந் நிலையில் நான்காம் நாள் ஆட்டம் நேற்று தொடங்க 42 ஓட்டத்துடன் துடுப்பெடுத்தாடிய தனஞ்சய டிசில்வா 107.5 ஆவது ஓவரில் அரை சதத்தை பெற, அஞ்சலோ மெத்தியூஸ் 114.6 ஆவது ஓவரில் டெஸ்ட அரங்கில் தனது 10 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார்.

இதன் பின்னர் 116.2 ஆவது ஓவரில் தனஞ்சய டிசில்வா 63 ஓட்டங்களுடன் விக்டர் நியாச்சியின் பந்தில் ஆட்டமிழந்தார். அவரின் ஆட்டமிழப்பையடுத்து வந்த ஏனைய வீரர்கள் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்து செல்ல சிறப்பாக ஆடி வந்த அஞ்சலோ மத்தியூஸ் 3 சிக்ஸர்கள், 16 பவுண்டரிகள் அடங்கலாக 175.6 ஆவது ஓவரில் 'டெஸ்ட் அரங்கில் தனது முதல் இரட்டைச் சதத்தை பதிவுசெய்தார்.

இறுதியாக இலங்கை அணி 176.2 ஓவர்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 515 ஓட்டங்களை குவித்தது டிக்ளே செய்தது.

மத்தியூஸ் 200 ஓட்டங்களுடனும், லசித் எம்புல்தெனிய எதுவித ஓட்டமின்றியும் ஆட்டமிழக்காதிருந்தனர். பந்து வீச்சில் சிம்பாவே அணி சார்பில் விக்டர் நியாச்சி மற்றும் சிக்கந்தர் ரஷா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், சேன் வில்லியம்ஸ் 2 விக்கெட்டுக்களையும், டொனால்ட் டிரிபனோ ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் இலங்கை அணி 157 ஓட்டங்களினால் முன்னிலை பெற்றது. சிம்பாப்வே அணி நான்காவது நாள் ஆட்ட முடிவில் தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக 30 ஓட்டங்களை ஆட்டமிழப்பு எதுவுமின்றி பெற்றுள்ளது. போட்டியின் ஐந்தாம் நாள் ஆட்டம் இன்று நடைபெறும்.

## நொதேண் வி.கழகம் நடத்தும்

## மரதன் ஓட்டப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்தும் மரதன் ஓட்டப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

மேற்படி போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை நடை பெறவுள்ளது.

ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடு இன்றி மேற்படி போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

இப்போட்டியில் கலந்து கொள்ளவிரும்புவோர் கல்வியங்காடு சந்திக்கு சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு வருகை தருமாறு மரதன் ஓட்டப்போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

ஆண்களுக்கு 7 கிலோ மீற்றரும் பெண்களுக்கு 5 கிலோ மீற்றருமாக போட்டி இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெறுவொருக்கு வெற்றிக்கேடயம், பணப்பரிசு, பதக்கம் மற்றும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

மேலும் பத்து பேருக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படவுள்ளது.

தொடர்பு - 077 270 2075, 075 041 0487

## அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடர்

## ஆஸ்லே பார்டியும் நவோமி ஒசாகாவும் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஆஷ்லே பார்டியும் ஜப்பானை சேர்ந்த நவோமி ஒசாகாவும் 3 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.


உலகின் முதல் நிலை வீராங்கனையும், கடந்த ஆண்டு பிரெஞ்சு ஓபன் பட்டத்தை வென்றவருமான ஆஷ்லே பார்டி 2 ஆவது சுற்றில் சுலோவெனியாவை சேர்ந்த ஹெர் சாக்கை எதிர் கொண்டார்.

இதில் ஆஷ்லே பார்டி 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 3 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

3 ஆவது வரிசையில் இருப்பவரும் நடப்பு சம்பிய னுமான நவோமி ஒசாகா 2 ஆவது சுற்றில் சீனாவை சேர்ந்த ஜெங்கை எதிர் கொண்டார். இதில் ஒசாகா 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வென்றார்.

உலகின் 8 ஆவது வரிசையில் உள்ள செக் குடியரசின் பெட்ரோ சிவிட்டோவா 7-5, 7-5 என்ற செட் கணக்கில் ஸ்பெயினை சேர்ந்த படோசவை தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றைய 2 ஆவது சுற்று ஆட்டங்களில் குரோஷியாவின் பெட்ரா மேட்ரிக், டென்மார்க்கின் வோஸ்னியாக்சி அமெரிக்காவின் கெனின் ஆகியோர் வெற்றி பெற்றனர்.




நெஞ்சை விட்டகலவில்லை
உங்கள் நினைவுகள்

தோற்றம் 06 - 06 - 1942

மறைவு 24 - 12 - 2019





திருமதி தில்லைநாதன் சர்வேஸ்வரி

திதி - 23.01.2020

சொந்தக்காரராகு முன்பே எனக்கு
பொரிச்சப் பிரட்டின சோறும்
புட்டும் தந்து என்மீது அளவு கடந்த
அன்பு காட்டிய ஈசா மாமியை
ஒரு போதும் மறவோம்.

(1970)

மூளாய் தங்க.முகுந்தன் குடும்பம்



பாராட்டி வாழ்த்துகின்றோம்

தந்தை செல்வாபுரம்
தெல்லிப்பளையைச் சேர்ந்த
நாகலிங்கம் இரத்தினபூபதி
அவர்கள் இலங்கை சோசலிச
குடியரசின் இலங்கை
முழுவதற்குமான சமாதான
நீதவானாக (J.P) மாகாண
மேல் நீதிமன்ற நீதிபதி
அ.பிறேம்சங்கர்
முன்னிலையில்
20.01.2020 இல் சத்தியப்
பிரமாணம் செய்துள்ளார்.
இவரது பணி தொடர
மனதார
வாழ்த்துகின்றோம்.






(696)

வாழ்த்துவோர்:-
குடும்பத்தினர்

## மக்கள் மத்தியில் அமைதியைப்பேண

# முப்படையினரைக் களமிறக்கும் அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

### ஜனாதிபதி கோட்டா நடவடிக்கை



(கொழும்பு)

**பொது மக்கள் மத்தியில் அமைதியைப் பேணும் பொருட்டு நாடளாவிய ரீதியில் முப்படையினரை அனுப்புவது குறித்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் நேற்று புதன்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.**

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதையடுத்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

அதன்பின்னர் குறித்த வர்த்தமானி அறிவிப்பு ஒவ்வொரு மாதமும் பொதுமக்கள் கட்டளை சட்டத்திற்கமைய ஜனாதிபதியால் வெளியிடப்படுகின்றது.

இதற்கு முன்னர் கடந்த டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி குறித்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதன்படி, 25 மாவட்டங்கள் மற்றும் நாட்டுக்கு உரித்தான கடல்பகுதி உள்ளடங்கிய கடற்கரைப் பிரதேசங்களில் இந்த அமைதி நடவடிக்கை அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## வயதெல்லை பாராது அரச தொழில் வாய்ப்பு



(கொழும்பு)

அரச தொழிலுக்கான வயதெல்லையைப் பாராது அரசாங்கம் தொழில் வாய்ப்புகளை வழங்குமெனவும் வயதெல்லையில் மாற்றம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இராஜாங்க அமைச்சர் ஜோன் செனவிரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அரசாங்க தொழில் ஆணைக்குழுவில் அனுமதி பெற்று பின்பு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் சித்தியடையாத ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் வழாங்குவதாக உறுதியளித்த வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


நெஞ்சகலா நினைவின் 31ஆம் நாள்

அமரர் கந்தையா குணலிங்கம்

அன்னை மடியில் 1953.12.28
ஆண்டவன் பிடியில் 2019.12.25

அன்னை தந்தையின் அன்பு மகனாய்
மாமன் மாமியின் மரிக்கொழுந்தாய்
மனைவியின் அன்புத் தோழனாய்
உறவுகளின் உதிரத்தின் ஊற்றாய்
ஊரவர் மனங்களில்
உறைந்தவனாய்
சிவனின் சரியாவழி சிவ தொண்டனாய்
வாழ்ந்து வழிகாட்டிய
எம் இதய தெய்வம்



அன்னாரின் 31ஆம் நாள் கிரியைகள் 2020.01.24 வெள்ளிக்கிழமை நாளை அவரது இல்லத்தில் நடைபெறும்.
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

7ஆம் வட்டாரம், சிவநகர்,
முல்லை. புதுக்குடியிருப்பு.

தகவல்:
திருமதி. கு.ருக்மணிதேவி (மனைவி)

(C-0128)


## செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்குத் தங்கம்



(கண்டி)

கல்வி அமைச்சு அகில இலங்கை ரீதியில் நடத்திய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் (KIDS ATHLETICS) போட்டியின் இறுதிப்போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி தரம்-4, தரம்-5 ஆண் மாணவர்களுக்கான போட்டியில் தேசிய ரீதியில் இரு பிரிவுகளிலும் தங்கப் பதக்கத்தை பெற்றது. இப்போட்டி அண்மையில் கண்டி நாவலப்பிட்டி ஜெயதிலக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இவ் இறுதிப்போட்டியில் 72 பாடசாலைகள் அகில இலங்கை ரீதியில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)


அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை (மாஞ்சோலை)
நோயாளர் நலன்புரிச்சங்க வருடாந்த பொதுக்கூட்டமும்
புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவும்-2020

காலம்: 25.01.2020 சனிக்கிழமை காலை 10.00 மணி
இடம்: மாவட்ட பொது வைத்தியசாலை கேட்போர் கூடம்
மேற்படி விடயதானத்தில் ஆர்வம் உள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம்,
மா.பொ.வை. முல்லைத்தீவு.

(C-9035)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# கல்வி மேம்பாட்டுக்கு ஊக்குவிப்புத் தொகை





(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசபிதா தங்கத்துரை அறக்கட்டளையின் நிதியுதவியில், யாழ்.திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் இருபது மாணவர்களுக்கு, மாணவர் ஒருவருக்கு ரூபா ஐந்நூறு வீதம் வைப்பிலிடப்பட்டு, அவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக, ஊக்குவிப்பு தொகையாக, சிறுவர் சேமிப்பு புத்தகம் வழங்கப்பட்டது.

இத் திட்டம் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான விந்தன் கனகரட்ணத்தின் கோரிக்கைக்கு அமைவாக அறக்கட்டளையின் ஸ்தாபகரின் நிதியுதவியில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக கடந்த 13. ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட இந் நிகழ்வில் விந்தன் கனகரட்ணத்தோடு ரெலோவின் நல்லூர் தொகுதி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான கே.மதுசுதன், பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்கரன், பிரதி அதிபர் க.சதீஸ்கரன் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-9)

# அமைச்சர் டளஸ் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இந்து-பௌத்த கலாசார பேரவையின் 11 ஆம் ஆண்டு விழாவில் இலவச இரண்டாம் மொழிக்கல்வியை (ஆங்கிலம், சிங்களம்) 600 மணித்தியாலங்கள் பூர்த்தி செய்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 181 மாணவர்களுக்கு விசேட சான்றிதழை வழங்கிக் கௌரவிக்கும் முகமாகவே கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக ஜனாதிபதியின் வடமாகாண ஆலோசகர் எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந் நிகழ்வு யாழ். இலங்கை வேந்தன் கல்லூரியில் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது. (இ-134)

# ஒளிப்படங்களின் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பழங்கால ஒளிப்படங்களின் திருவிழா-2020 ஆரம்ப நிகழ்வு நாளை 24 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் ராஜேந்திரபிரஷாத் வீதி தந்தை செல்வா அரங்கில் (யாழ்.மத்திய கல்லூரி) நடைபெறும்.

இதில் ஒளிப்படக் காட்சிகள் 25,26,27 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளன. (இ-5)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## நோய் தீர்க்கும் சர்ப்பக் குறியீடு



இரண்டு பாம்புகள் (சர்ப்பங்கள்) ஒரு தடியை பின்னிக் கொண்டிருக்கும் உருவம் பொறிக்கப்பட்ட குறியீட்டை வைத்தியசாலைகளிலும், மருத்துவர்களின் வாகனம் மற்றும் அவர்களின் அறிமுக அட்டைகளிலும் முகவரியுடன் கூடிய கடித ஏட்டிலும் காணலாம். அந்தக் குறியீடு மருத்துவத் துறையின் குறியீடாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது போன்ற குறியீடு சிவன் கோயில் மற்றும் அம்மன் கோயில் வளாகங்களிலும் அரச மரங்களின் அடியிலும் கற்சிலைகளாக நிறுவப்பட்டிருப்பதை காணலாம்.

ஆலயங்களில் நிறுவப்பட்டிருக்கும் இத்தகைய சர்ப்ப பிரதிஷ்டைகளை தினமும் ஒரு முறை தரிசித்து வந்தால் அன்றைய தினம் நாம் செய்த கர்மங்கள் அனைத்தும் நம்மை விட்டு நீங்கிவிடும். இந்த கற்சிலைகளைப் பார்த்துத்தான் மருத்துவத்துறை தங்கள் குறியீட்டை அமைத்துக் கொண்டுள்ளது. இந்த சர்ப்ப பிரதிஷ்டைகளை தினமும் தரிசித்து வந்தால் தீராத வியாதிகள் எல்லாம் தீரும் என்பது பலருக்கு தெரியாத ரகசியம்.

நம் முன்னோர்கள் தினமும் இந்த சர்ப்ப பிரதிஷ்டைகளை (இரண்டு பாம்புகள் பின்னிக் கொண்டிருப்பது போன்ற கற்சிலைகள்) கோயில்களில் தரிசித்து வந்தார்கள். இதனால் நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையில் அவர்கள் இருந்தார்கள். இந்த விடயம் தற்கால மனிதர்களுக்கு தெரியாது.

ஜோதிடத்தில் செவ்வாய்க் கிரகத்திற்கு, ரோகக்காரகன் (நோய்க்கு காரணமானவன்), சத்ருகாரகன் (பகைக்கு காரணமானவன்) ருணக்காரகன் (கடன் தொல்லைக்குக் காரணமானவன்) என்று பெயர். இந்த செவ்வாய்க்கிரகம் ஆயில்யம் நட்சத்திரத்தில் நீச்சம் அடைகிறது. அதாவது செயலற்றுப் போகிறது. "ஆயில்யம்" என்றால் "பின்னிக் கொள்வது" அல்லது "தழுவிக் கொள்வது" என்று பொருள்படும். இந்த ஆயில்யம் நட்சத்திரத்தின் உருவம் பின்னிக்கொண்டிருக்கும் பாம்பின் உருவத்தை தினமும் தரிசித்து வந்தால் நம் பாவங்கள் அனைத்தும் நம்மை விட்டு நீங்கும் என்பது ரகசியமாகும்.

கிருஸ்தவர்களின் புனித நூலான பரிசுத்த வேதாகமத்தில் எண்ணாகமம் 21 ஆம் அதி காரத்தில் சர்ப்ப உருவம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அதை அப்படியே கீழே கொடுத்துள்ளேன். பரிசுத்த வேதாகமம் எண்ணாகமம் 21 ஆம் அதிகாரம் 8 மற்றும் 9 ஆம் வசனங்கள்.

வசனம் 8. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி; நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தை செய்து, அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கிவை; கடிக்கப் பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்றார்.

வசனம் 9. அப்படியே மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு தம்பத்தின் மேல் தூக்கி வைத்தான்; சர்ப்பம் ஒருவனை கடித்த போது, அவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைப்பான்.

# நூற்றாண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் (வரையறுக்கப்பட்டது) நூற்றாண்டு நிறைவு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர்கூடத்தில் டாக்டர்.ச. நிமலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன், ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், யாழ்.பல்கலைக்கழக சட்டக் கல்லூரி பீடாதிபதி கலாநிதி கு.குருபரன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

இதில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா, யாழ்.ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர். (இ-5)

# இராசி பலன்

**மீனம்** – பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**மேடம்** – இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**இடபம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிறருக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை உடல் நலனில் கவனம் எடுக்கும் நிலை ஏற்படலாம்.

**மிதுனம்** – பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** – பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சுக் | இராசி பலன் | | |
| சூரி, புத | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகினி, மிருகசீடம் | | |
| சனி, குரு.சந், கேது | செவ் | | |

**23.01.2020**

தை 09, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு

சதுர்த்தசி பின்னிரவு 3.02 மணிவரை

பூராடம் பின்னிரவு 2.12 மணிவரை

சுபநேரம் 8.06-9.36 மணிவரை

இராகுகாலம் 2.06-3.36 மணிவரை

இறைவனுக்கு அஞ்சுவதே விவேகத்தின் தொடக்கம்

வளவன்

**கடகம்** – மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டுவீர்கள், வழிபாடு சிறப்பிணைத் தரும், செய்தொழில் விருத்தியுண்டு. ஆரோக்கியமான நாள்.

**மகரம்** – பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** – புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம மேலோங்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** – மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், சுப காரியச் செலவுகளில் தாரளம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்த்துக் கொள்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்,பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** – சுறுசுறுப்பாக செயற்படு வீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** – பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், ஆழ்ந்த சிந்தையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன நன்மை உண்டு.

# இந்தியக் கலைஞர்களின் ஆற்றுகையும் உள்ளூர் கலைஞர்களின் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின்பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ்.இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து நடத்தும் இந்தியக் கலைஞர்களது கதக், வீணை கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்தியாவிலிருந்து திருமதி. ஜெயசிறி ஆச்சார்யவின் தலைமையில் கதக் நடனக் கலைஞர்களும் திருமதி.யோக வந்தனா வின்தலைமையில் வீணை இசைக் கலைஞர்களும் நடத்தும் நடன அளிக்கை மற்றும் பயிற்சிப்பட்டறை என்பன நடைபெறவுள்ளன.

அத்துடன் உள்ளூர்க் கலைஞர் வேல் ஆனந்தனின் ஆடலமைப்பு-நெறியாள்கையில் வவுனியா ஆடலணியினர் வழங்கும் ''கரை ஏற மறுக்கும் ஓடங்கள்'' கீழைத்தேச ஆடல்கதை (Oriental Ballet) எனும் நிகழ்வும் நடைபெறவுள்ளன என வடமாகாண பண்பாட்டலுவல்கள் உதவிப் பணிப்பாளர் திருமதி.சுஜீவா சிவதாஸ் அறிவித்துள்ளார்.

நடன நிகழ்வு, பயிற்சிப் பட்டறை விபரம்,

நடன அளிக்கை 26.01.2020 ஆம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம், பயிற்சிப்பட்டறை27.01.2020 ஆம் திகதி காலை 8.30மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை இராமநாதன் நுண்கலைப் பீடம், மருதனார் மடம், நடன அளிக்கை, வீணை இசை 27.01.2020 ஆம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை புதுக்குடியிருப்பு பொன்விழா மண்டபம் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)


## பெயர் மாற்றம்

சங்கானை மேற்கு நிற்சாமத்தை வசிப்பிடமாகக் கொண்ட மகேந்திரன் மங்கையராணி ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பங்கயராணி என தவறுதலாகப் பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் மகேந்திரன் மங்கையராணி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
மகேந்திரன் மங்கையராணி

(1959)



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-6824)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



# சேவைநலன் பாராட்டு

கடந்த 31 வருட கல்விச்சேவையில் எமது பாடசாலையில் 10 வருடங்களாக ஆசிரியராக, பகுதித் தலைவராக அரும்பணியாற்றி இன்றுடன் (23.01.2020) ஓய்வுபெற்றுச் செல்லும்

திருமதி.

## சொரூபவதி ரகுபதி

(B.A, Dip in Edu)



சிந்தை சொல் செயலழகி
இங்கிதமாய் கதைபேசி பவனிவந்து
பக்குவமாய் சீரிய நற் கடமை புரிந்தீர்
என்றும் பல்லாண்டு வாழ்க வாழ்கவென
அகவை அறுபதில்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
நீடூழி வாழி!

Best Wishes

கல்விச் சேவை விபரம்

யா/நாவற்குழி மகா வித்தியாலயம் 17.08.1988-04.02.1991
கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி 05.02.1991-31.12.1992
யா/நாவற்குழி மகாவித்தியாலயம் 01.01.1993-16.05.1993
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் 17.05.1993-09.05.2010
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம் 10.05.2010-23.01.2020

யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்.

1948



# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

### சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.02.2020-31.12.2020 வரையுள்ள காலப்பகுதிக்கான பகிரங்க ஏலக் கேள்வி அறிவித்தல், கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தை இறைச்சிக்கடைகளினை 01/02/2020 - 31/12/2020 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி அறிவித்தல், பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கேள்வி அறிவித்தல், ஏலக் கேள்விகள் 03/10/2019 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல், பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

ஏலம் 30/01/2020 காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை 23/01/2020 தொடக்கம் 30/01/2020 முற்பகல் 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

| தொ.இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த ஏலத் தொகை (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 51,100.00 | 100.00 |
| 02 | கோயிற்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,800.00 | 206,800.00 | 100.00 |
| 03. | மண்டான் சந்தை | 500.00 | 42,750.00 | -- |
| 04. | துன்னாலை வ க்குச் சந்தை. | 7,500.00 | 58,092.50 | -- |

ஏலக்கேள்வியில் தெரிவு செய்யப்பட்ட சித்திரக் கேள்விதாரர் உடனடியாக ஏலக் கேள்வித் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப் பணத்தை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

### கேள்வி அறிவித்தல்

01.கேள்விப் பத்திரம் வழங்கத் தொடங்கும் திகதி :-23/01/2020 தொடக்கம் 29/01/2020 பி.ப.3.00 மணி வரை
02.கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-30/01/2020 காலை 10.00 மணி வரை
03.கேள்விகள் திறக்கப்படும் திகதி :-30/01/2020 காலை 10.30 மணி

| தொ.இல | குத்தகைவிபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புபணம் | மீளளிக்கப்படாதகேள்விப்பத்திரக்கட்டணம் (வரிகள் நீங்கலாக) | ஆகக் குறைந்தகேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மாதவாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | உடுப்பிட்டிஆட்டிறைச்சிக் கடை | 1000.00 | 500.00 | 100,000.00 | 100.00 |

க.த.ஜங்கரன்,
தவிசாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.

C-9034


# 3 ஆண்டுகள் நெற்செய்கை மேற்கொள்ளப்படாதிருப்பின் ஆர்வமுடையவர்களுக்கு காணிகள் வழங்கப்படும்

## வேலணை பிரதேச செயலர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச செயலக விவசாயக் குழு மற்றும் டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வேலணை பிரதேசத்தில் காணி உரிமை கொண்டவர்களுக்காக அறியத்தரப்படுகின்றது என பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் அறிவித்துள்ளார்.

1. வேலணை பிரதேசத்தில் நெற்காணி உரிமை கொண்டவர்கள் தொடர்ச்சியாக 3 ஆண்டுகளாக நெற்செய்கை மேற்கொள்ளப்படாதிருப்பின் அக்காணிகள் பிரதேச உணவு உற்பத்தியைக் கருத்தில் கொண்டு பிரதேசத்தில் விவசாய செய்கையில் ஆர்வமுடையவர்களுக்கு கிராம உத்தியோகத்தரின்சிபாரிசினைப்பெற்று விவசாய சம்மேளனத்தால் நிபந்தனை அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் நெற்செய்கைக் காகக் கையளித்தல்.

குறிப்பு:- தொடர்ச்சியாக 3 ஆண்டுகளாக நெற்செய்கை மேற்கொள்ளாத காணி உரிமையாளர்கள் 2020 ஆம் ஆண்டில் பெரும்போக உணவு உற்பத்தியை மேற்கொள்ள ஆர்வமாக இருப்பின் அது தொடர்பாக காணி அமைந்துள்ள கிராம உத்தியோகத்தரிடமும் விவசாய சம்மேளனத்திலும் தங்கள் உறுதிப்படுத்துகையை எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னராக மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

2. வேலணை பிரதேசத்தில் தற்போது வசிக்கும் பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு குடியிருப்புக் காணிகளைக் கொண்ட காணி உரிமையாளர்கள் தங்கள் காணிகளைத் துப்புரவு செய்வதுடன் அக் காணிகளை எல்லையிட்டு பாதுகாத்துக் கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் இ.சிறிதரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.பிரதீபா காயத்திரி கஜபதி, வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்தவர்கள் கைது

(வெள்ளவத்தை)

சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த உஸ்பெகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 5 பெண்களை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர்.

வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டிய ஆகிய பகுதிகளில் உள்ள சுற்றுலா விடுதிகளில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். 25 முதல் 35 வயதுகளை உடைய பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட பெண்களை மிரிஹான தடுப்பு நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2020 - 12.02.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



## சுபச் செலவுகள் அதிகரிக்கும் நேரம்




விகாரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன், தன -லாபாதிபதியான புதனுடன் இணைந்து ஜீவன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இதனால் புத-ஆதித்ய யோகம் உருவாகிறது. எனவே பொருளாதார வளர் ச்சி சிறப்பாக அமையும். எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.

இல்லத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உள்ளம் மகிழும் சம்பவங்கள் ஏராளமாக இந்த மாதம் நடைபெறப்போகிறது. உறவினர்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். வீண் விவாதங்களையும் வேண்டாத மனக்கசப்புகளையும் மாற்றிக் கொண்டு, அவர்களாகவே உங்களிடம் வந்து பேசத் தொடங்குவர்.

நான்காம் வீட்டில் செவ்வாய் சஞ்சரிப்பதால் குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. குருவின் பார்வை இப்பொழுது உங்கள் இராசியில் பதிவதால் வருமானம் அதிகரிக்கும். நீண்டநாள் பாக்கிகள் வசூலாகும். நிலம், பூமி விற்பனை மூலம் நீங்கள் கேட்ட தொகை கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சியில் இருந்த தடை அகலும்.

பஞ்சம ஸ்தானத்தில் குரு, சனி, கேது ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. '5, 9 ஆகிய இடங்களில் குரு பகவான் சஞ்சரித்தால், எண்ணற்ற நற்பலன்களைத் தரும்' என்பது ஜோதிட நியதி. எனவே உடல் நலம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடி கொள்ளும். கடன்சுமை குறையும். கவலைகள் படிப்படியாக மாறும். கல்யாண முயற்சியில் இதுவரை இருந்த தடை அகலும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வேலை கிடைக்காதவர்களுக்கு வேலையும், மாலை கிடைக்காதவர்களுக்கு மணமாலையும் கிடைப்பதற்கான அருளை வழங்க குருபகவான் காத்திருக்கும் நேரம் இது. எனவே இம்மாதத்தில் தொடர்ந்து குருபகவான் வழிபாடும், குருபகவானுக்குரிய பீடங்களுக்கு சென்று சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது அவசியமாகும். அதுமட்டுமல்லாமல் இம்மாதம் தைப்பூசத் திருநாளில் முருகப் பெருமானை முறையாக வழிபடுவது நல்லது. மார்த்தாண்ட பைரவர் வழிபாடும், அறுபத்து மூவர் வழிபாடும் மனக்கவலையை மாற்றும்.

### கும்ப புதன் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் புதன் சஞ்சரிக்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. அதேநேரத்தில் புதன் தன-லாபாதிபதியாகவும் விளங்குவதால், அவர் 6 இல் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஜனவரி 28 ஆம் திததி கும்ப இராசிக்கு புதன் செல் கிறார். அப்பொழுது உங்கள் இராசியை சப்தம பார்வையாக புதன் பார்ப்பார். புதன், சுக்கிரனோடு இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குவதால், ஆடை-ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டு வர்க்கத்தில் ஆதாயம் கிடைக்கும். தொழில் போட்டிகள் அகலும். பெண்களால் பெருமைகள் சேரும். வாகன யோகம் உண்டு.

பயணங்கள் பலன் தருவதாக அமையும். சகோதரர்களோடு ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைகள் இக்காலத்தில் உங்களுக்கு கைகொடுத்து உதவும்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

பெப்ரவரி 4 ஆம் திகதி மீன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்கு சுக்கிரன் உச்சம் பெறுவதால், இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாக அமையும். 3, 10 இற்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். நிலுவையில் இருந்த வழக்குகள் நினைத்தபடியே நல்ல முடிவிற்கு வரும். கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு ஒருசிலருக்கு உருவாகும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்க வேண்டுமானால் சகாய ஸ்தானத்திற்கு அதிபதி உச்சம் பெற்றிருக்க வேண்டும். அந்த அமைப்பு இப்பொழுது இருக்கிறது. எனவே மகிழ்ச்சி பொங்கும் நேரம் இது. மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும்.

### தனுசு செவ்வாய் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாய். அவர் மாதத் தொடக்கத்தில் தன் சொந்த வீடான விருச்சிகத்தில் சஞ்சரிக்கிறார். பெப்ரவரி 9 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கிறார். பஞ்சம ஸ்தானத்திற்கு செவ்வாய் வரும்பொழுது பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அண்ணன், தம்பிகளின் அரவணைப்போடு ஒருநல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். சிந்திய வியர்வைக்கு சிறப்பான பலன் கிடைக்கும்.


உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இதுவரை தடைப்பட்டு வந்த பதவி உயர்வு தானாக வந்து சேரும். இடையூறு செய்தவர்கள் இனி விலகுவர். கடை திறப்பு விழா, கட்டடத் திறப்பு விழாக்கள் நடத்த சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

எதிர்பார்த்த சுபகாரியங்கள் எளிதில் கைகூடும். புதியபாதை புலப்படும். புகழ்மிக்கவர்கள் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை சிறப்பாக இருக்கும்.

ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்பட்டு, மற்றவர்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்வீர்கள். குருவின் பார்வை பலத்தால் அனைத்து தோஷங்களில் இருந்தும் விடுபடுவீர்கள். சந்தோசத்தை சந்திக்கும் வாய்ப்பு அதிகரிக்கும். பிள்ளை களால் பெருமை சேரும். சுபகாரியங்கள் கைகூடும். தாய்வழி ஆதரவும், சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பும் திருப்தி தரும்.

பாதியில் நின்ற வீடு கட்டும் பணி இப்பொழுது மீதியும் முடியும். பணி புரியும் பெண்களுக்கு கேட்காமலேயே பதவி உயர்வு கிடைக்கலாம். மேலதிகாரிகள் உங்கள் திறமையைக் கண்டு வியப்பர். வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வழிபாடுகள் உங்களுக்குத் தேவை. அமாவாசை அன்று முன்னோர் வழிபாடும், தைப்பூசத் தன்று முருகப்பெருமான் வழிபாடும் முன்னேற்றம் வழங்கும்.



## செலவிற்கேற்ற வரவு வந்து சேரும்




விகாரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் பஞ்சம ஸ்தானத்தில் விரயாதிபதி சூரியனுடன் இணைந்திருக்கிறார். எனவே குடும்பச் சுமை கூடும். விரயங்கள் அதிகரிக்கும். வீண் கோபத்தினாலும், வேண்டாத வாக்கு வாதத்தினாலும் பல நல்ல வாய்ப்புகளை இழக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. மேலும் 4 ஆம் இடத்தில் குரு, கேது ஆகிய கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. இதனால் கொஞ்சமும் மனநிம்மதி இருக்காது. என்னதான் முயற்சி செய்தாலும், பாடுபட்டாலும் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. 'உடல்நலத்தை பொருட்படுத்தாமல் எவ்வளவு கடினமாக உழைத்தாலும் நல்ல பெயர் எடுக்க முடியவில்லையே, நமது திறமைக்கு எப்போது மதிப்புக் கிடைக்கும், புதிய வேலைக்கு முயற்சி செய்யலாமா?' என்றெல்லாம் சிந்திப்பீர்கள். ஆரோக்கியத் தொல்லை அதிகமாகவே இருக்கும்.

சுக ஸ்தானத்தில் சனி, கேது ஆகியவை சஞ்சரிக்கும் பொழுது எப்படித்தான் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினாலும் எளிதில் நோய் வந்து ஆட்கொள்ளும். மூட்டுவலி, முதுகுவலி போன்றவை ஏற்படலாம். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகளால் மனக்கலக்கம் ஏற்படும். இதுபோன்ற நேரத்தில் நோய்க்கான அறிகுறிகள் தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே இல்லத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு குறையலாம். சண்டை, சச்சரவுகள் மேலோங்கும். அவற்றிலிருந்து விடுபட நீங்கள் எதைச் செய்தாலும் குடும்பப் பெரியவர்களை கலந்து ஆலோசித்துச் செய்வது நல்லது. குலதெய்வ வழிபாடு அவசியம் தேவை. குடும்ப இரகசியங்களை மூன்றாம் நபரிடம் சொல்வதன் மூலம் முன்னேற்றப் பாதிப்புகள் ஏற்படும். அனுபவமிக்கவர்களின் ஆலோசனை அவ்வப்போது கைகொடுக்கும். அல்லாமல் தவறான வழிகாட்டுதலின் படி நடந்தால் தடைகளும் தாமதங்களும் ஆட்கொள்ளும். எதிலும் அகலக்கால் வைக்க வேண்டாம். இம்மாதம் அர்த்தாஷ்டமச் சனிக்குப் பரிகாரமாக சனிக்கிழமை தோறும் அனுமன், பெருமாள், லட்சுமி ஆகியோரை வழிபட்டு வருவது நல்லது. தைப்பூச திருநாளில் கந்தப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். தை அமாவாசை அன்று முன்னோர்களை நினைத்து வழிபட்டால் முன்னேற்றத்தில் பாதிப்பு ஏற்படாது.

### கும்ப புதன் சஞ்சாரம்

புதன் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு அதிபதியாவார். அவர் ஜனவரி 28 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கு செல்கிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் 6 ஆம் இடத்திற்கு செல்லும்பொழுது, மிகுந்த யோகத்தை வழங்குவார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். எதிரிகளின் பலம் குறையும். சாட்சி கையெழுத்திட்டதன் மூலம் ஏற்பட்ட சங்கடங்கள் அகலும். உத்தியோகத்தில் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைத்து மகிழ்வீர்கள். அதிகாரிகள் உங்கள் திறமையைப் புரிந்து கொண்டு, சம்பள உயர்வு மற்றும் சலுகைகள் கொடுக்க முன்வருவர். வீடு, வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். எதிர்கால முன்னேற்றம் கருதி இக்காலத்தில் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

### உச்ச புதன் சஞ்சாரம்

பெப்ரவரி 4 ஆம் திகதி மீன இராசிக்குள் சுக்கிரன் செல்கிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். உங்கள் இராசிக்குத்தனாதிபதியாகவும் 9 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன், பெப்ரவரி 4 ஆம் திகதி உச்சம் பெறுவது முதல் உங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான சூழ்நிலை உருவாகும். 'இல்லத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்த பணவசதி இல்லையே' என்று கவலைப் பட்டவர்களுக்கு இக்காலத்தில் தேவைப்பட்ட பணம் தேவையான நேரத்தில் வந்து சேரும். தங்கம், வெள்ளி வாங்குவதில் இருந்த தடை அகலும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

### தனுசு செவ்வாய் சஞ்சாரம்

பெப்ரவரி 9 ஆம் திகதி தனுசு இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அங்கு அர்த்தாஷ்டமச் செவ்வாயாக மாறுகிறார். இதனால் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கலாம். 'குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படுகின்றதே' என்று கவலைப்படுவீர்கள். குரு - மங்கள யோகமும் இக்காலத்தில் செயற்படும். எனவே வீண் விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள். நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். எதிர்மறைச் சிந்தனைகள் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இம்மாதம் 4 ஆம் இடம் வலுப்பெறுவதால், நவக்கிரக சாந்தி செய்வது நல்லது. குறிப்பாக சர்ப்ப பிரீதி செய்வதன் மூலம் சந்தோசங்கள் கிடைக்கும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் குடும்பச்சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை. 'கடுமையாக முயற்சித்தும் காரியங்கள் கைகூடவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். அர்த்தாஷ்டம ஸ்தானம் வலுப்பெற்றிருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்துச் செய்வது நல்லது. அனுபவமிக்கவர்களின் ஆலோசனை கைகொடுக்கும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகலாம். மற்றவர்களுக்கு பொறுப்பு சொல்வதைத் தவிர்த்திடுங்கள். சேமிப்பு கரையக் கூடும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி ஒரு தொகையை செலவிட நேரிடும். பணிபுரியும் பெண்களுக்கு பிரச்சினைகள் அதிகரிக்கும். பக்கத்தில் பணிபுரிபவர்களிடம் உங்கள் முன்னேற்றத்தைச் சொல்வதன் மூலம் எதிர்பாராத நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடலாம். முன்னெச்சரிக்கை தேவைப்படும் நேரம் இது. குரு வழிபாடும், அறுபத்து மூவர் வழிபாடும் குழப்பங்களை அகற்றும்.

(தொடரும்)

# முதியோர் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள ஒரு இலட்சத்து 37 ஆயிரம் பேர் காத்திருப்பு

(கொழும்பு)

முதியோர் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் 70 வயதிற்கு மேற்பட்ட ஒரு இலட்சத்து 37 ஆயிரம் பேர் காத்திருப்புப் பட்டியலில் உள்ளனர்.

முதியோருக்கான தேசிய செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

நிதி ஒதுக்கீடுகள் இன்மையால், முதியோருக்கான கொடுப்பனவை வழங்க முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக கொடுப்பனவை செலுத்துவதற்குரிய நிதியை அரசிடம் கோரியுள்ளதாகவும் குறித்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

தற்போது 4 இலட்சத்து 16 ஆயிரத்து 667 பேர் முதியோருக்கான கொடுப்பனவை பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.(இ-7)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2020 ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் வேலைத்திட்டங்களிற்கு பொருத்தமான பயனாளிகளை தெரிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

இவ் வேலைத்திட்டங்களில் இணைந்து பயன்பெற விரும்புபவர்கள் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு அலுவலக நேரத்தில் வருகை தந்த உரிய விபரங்களுடன் விண்ணப் பப்படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

வேலைத்திட்டங்களின் விப ரம்

பதிவு செய்யப்பட்ட கலை இலக்கிய மன்றங்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள்.

வடக்கு மாகாண அர உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள்

வடக்கு மாகாண கலைக்குரிசில் விருது, வடக்கு மாகாண இளைஞர்விருது, வடக்குமாகாண சிறந்த நூற்பரிசு, வடக்கு மாகாண நூற் கொள்வனவு, நடுவர் தெரிவு.

இவை யாவற்றுக்குமான இறுதித்திகதி 31.03.2020 ஆகும் . எமது பிரதேச விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப் படிவங்களை 20.03.2020 ஆம் திகதிக்கு முன்பதாக எமது பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் 2020 இன் கீழ் வழங்கப்படவுள்ள கலைமன்ற அபிவிருத்தி நிதி, கலைஞர் ஊக்குவிப்பு நிதி என்பன தொடர்பான விடயங்களிற்கும் பொருத்த மானவர்கள் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என பிரதேச செயலாளர் மேலும் அறிவித்துள்ளார். (இ)





கோப்பாய் பிரதேச தேசோதய சபையால் நீர்வேலி கரந்தன் மேற்கில் இலவச கண்பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கல், சித்த ஆயுள்வேத மருத்துவ சேவை, கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச தேசோதய தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (படங்கள்:-மயில்வாகனம்)

# தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கைக்கு அனுமதி

## சுற்றறிக்கை வெளியீடு

(கொழும்பு)

பத்து வருடங்களாகப் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாத தரிவு நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு அரச தகவல் திணைக்களம் இம் மாதம் சுற்றறிக்கை மூலம் அனுமதி வழங்கியது

பல காலமாக விவசாய அபிவிருத்தித் திணைக்களங்களின் கோரிக்கையாக இருந்த தரிசு நிலங்களைச் சாகுபடிக்கு அனுமதிக்குமாறு கோரியதன் பயகாகக் குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

பத்து வருடத்துக்கு மேற்பட்ட தரிசு நிலமாகக் காணப்படும் பகுதிகளில் நெல், காய்கறிவகைகள், நீர்வாழ் தாவரங்கள் கால்நடைவளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு, கால்நடைக் கொட்டகைகள் மற்றும் பசுமை இல்லங்களை நிறுவ முடியும். அத்தோடு குறித்த பகுதிகளில் மண் அகழ்வு தடை செய்யப்பட்டிருப்பதுடன் இறப்பர், தெங்குச் செய்கைகளும் தடை செய்யப்பட்டன.

குறித்த திட்டம் தொடர்பில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயத்துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்களிடம் மேலதிகத் தகவல்களைப் பெற முடியும் என அரச தகவல் கூட்டுத்தாபன இயக்குநர் ஜெனரல் நாலக கலுவேவா மேலும் தெரிவித்தார். (இ-10)

# பாதுகாப்பு திணைக்களம்; இடைவிலகியவர்களை இணைக்க நடவடிக்கை

(கொழும்பு)

சேவையை இடைநடுவே விட்டுச் சென்ற சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் இணைவதற்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களம் எதிர்வரும் பெப்ரவரி 20 ஆம் திகதி வரை பொது மன்னிப்புக் காலத்தை வழங்கியது.

பல்வேறு காரணங்களுக்காக சேவையை இடைநடுவில் விட்டுச் சென்ற சிவில் பாதுகாப்பு ஆண்/ பெண் உத்தியோகத்தர்களை பொது மன்னிப்பின் கீழ் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இதன்படி சிவில் பாதுகாப்பு சேவையில் மீண்டும் இணைந்து கொள்ள விரும்புவோர் அதற்கான விண்ணப்பப்படிவத்தை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்து நேரடியாகவோ அல்லது www.csd.lk என்ற வலைத்தளத்திற்கூடாகவோ பெற்றுக்கொள்ள முடியும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# குருபரன் குறித்து ராணுவம் அனுப்பிய கடிதப் பிரதியை வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பணிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்றங்களில் முன்னிலையாவது தொடர்பில் கடந்த ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியை வழங்குமாறு இலங்கை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு பணித்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு இந்த அறிவுறுத்தலை வழங்கியது.

பொதுநல வழக்குகள் பலவற்றை பாதிக்கப்பட்ட தரப்புக்கள் சார்பில் முன்னெடுத்து வருபவரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவருமான கலாநிதி குருபரனை நீதிமன்றங்களில் முன்னிலையாவதை தடை செய்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடந்த நவம்பரில் பணித்தது.

இலங்கை இராணுவத்தின் அழுத்தத்தின் பின்னணியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இந்தப் பணிப்புரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமிக்கு வழங்கியது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அந்தக் காலப்பகுதியிலிருந்த பேரவையும் ஒப்புதல் வழங்கியது.

அத்துடன், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எவரும் நீதிமன்றங்களில் முன்னிலையாகி சட்டத்தரணியாகக் கடமையாற்ற முடியாது என்ற சுற்றறிக்கையையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடந்த நவம்பரில் வெளியிட்டது.

இந் நிலையில் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாகப் பணியாற்றும் சட்டத்தரணிகள் நீதிமன்றங்களில் முன்னிலையாவதற்கு தடைவிதித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியமைக்கும் தான் நீதிமன்றங்களில் முன்னிலையாவதைத் தடுக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை எடுத்த தீர்மானத்துக்கு எதிராகவும் குருபரன் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அத்துடன், உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவில் இணைப்பதற்காக தன்னை சட்டத்தரணியாக நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதைத் தடை செய்ய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்த தீர்மானம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஆவணங்களை வழங்குமாறு மானியங்கள் ஆணைக்குழுவிடம் தகவல் அறியும் சட்டம் ஊடாக குருபரன் கோரியிருந்தார்.

அந்த ஆவணங்களில் 2019 ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியை வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மறுத்துவிட்டது. அந்தக் கடிதத்தை பகிரங்கப்படுத்த வேண்டாம் என்று இராணுவம் ஆணைக் குழுவுக்கு வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய அந்தக் கடிதத்தை வழங்க முடியாது என்று குருபரனுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பதிலளித்திருந்தது.

இது தொடர்பில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு குருபரன் மேன்முறையீடு செய்திருந்தார்.

அது தொடர்பில் இரு தரப்பையும் அழைத்து தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு நேற்று முன்தினம் விசாரணை நடத்தியது.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த கம்மம்பில தலைமையில் உறுப்பினர்கள் நீதிபதி ரோஹினி வல்கம, சிரேஷ்ட சட்டத்தரணி கிஷாலி பின்ரோ ஜெயவர்த்தன, சிரேஷ்ட சட்டத்தரணி. எஸ்.ஜி.புஞ்சிஹேவா, கலாநிதி.செல்வி திருச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் தகவல் அறியும் உரிமை ஆணைக் குழுவின் செயலகத்தில் இந்த மேன்முறையீடு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

"கடந்த ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் பகிரங்கப்படுத்த முடியாது என்ற வாசகம் இடம்பெறாத நிலையில் அதனை வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மறுப்பது தகவல் அறியும் எனது உரிமையை மீறும் செயலாகும் என்று குருபரன் வாதிட்டார்.


கடிதத்தின் தன்மையை ஆராய்ந்த தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு, அந்தக் கடிதத்தை மேன்முறையீட்டாளரான குருபரனுக்கு வழங்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பணித்தது.

2019 ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், "யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் குருபரன், போதனைசார் அலுவலகராகவுள்ள நிலையில் நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதற்கும் அனுமதி உண்டா? அவர் இராணுவத்தினருக்கு எதிராக நீதிமன்றங்களில் முன்னிலையாகின்றார்" என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கேட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சாளம்பைக்குளம் குப்பைமேட்டினை அகற்றக்கோரி மக்கள் போராட்டம்







(நெளுக்குளம்)

வவுனியா மன்னார் வீதி புதிய சாளம்பைக்குளம் கிராமத்திற்கு அருகில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள, குப்பை மேட்டினை அகற்றும்படி கோரி, பிரதேச மக்களினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த குப்பை மேட்டில் வவுனியா நகர எல்லைக்குட்பட்ட குப்பைகள், வைத்தியசாலை கழிவுகள், பாவனையற்ற பிளாஸ்டிக் பொருட்கள், காலாவதியான மருந்துகள் போன்றவற்றினை குறித்த இடத்திற்கு உழவியந்திரங்கள், லொறிகள் மூலம் கொண்டு வந்து பாதுகாப்பற்ற முறையில் வீசுவதுடன், தீ மூட்டுவதால் வெளியாகும் கருமையான புகையினால், பல்வேறு சுவாசப் பிரச்சினைகள் மற்றும் மழை காலங்களில் அதிகளவு துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதேவேளை வவுனியா நகரிலிருந்து வாகனங்களில் கொண்டுவரும் கழிவுகளை உள்ளே, அனுமதிக்கமாட்டோம் என தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் தீர்வு கிடைக்கும் வரை தொடர்ந்து போராடப்போவதாகவும் தெரிவித்தனர்.

கடந்தவருடமும் குறித்த மக்களினால் இதேபோன்றதொரு போராட்டம் நடத்தப்பட்டிருந்த நிலையில் அதிகாரிகளின் உறுதி மொழிக்கமைய கைவிடப் பட்டிருந்தனர். தீர்வு கிடைக்காத நிலையில் ஒரு வருடத்திற்கு பின்னர் குறித்த போராட்டம் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போராட்ட இடத்திற்கு மேலதிக அரச அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபையின் தலைவர், பிரதேச செயலாளர், பொலிஸார் உட்பட பலரும் வருகை தந்து பிரச்சினையை சுமுகமாக்க முயன்றும் முடியாத நிலையில் உரிய தீர்வு கிடைக்கும் வரை கைவிடப் போவதில்லை என மக்கள் தெரிவித்து தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (9-299)

## தமிழுக்கு முன்னுரிமை வழங்காதவர்களை வரவேற்காதீர்கள் - சிவமோகன் எம்.பி

(அக்கராயன்)

தமிழர் தேசத்தில் தமிழுக்கு முன்னுரிமை கொடுக்காத எவருக்கும் வரவேற்பளிக்காதீர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்ச மன்னாரில் பனந்தும்பு தொழிற்சாலையில் அமைக்கப்பட்ட பெயர்ப் பலகையில் முதலிடம் பெற்றிருந்த தமிழ் மொழியினை அகற்றி சிங்கள மொழிக்கு முதலிடம் கொடுத்து மாற்றி அமைத்தமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் சிங்களமும் தமிழும் சம உரிமை கொண்ட மொழிகளாகும் .இதனால் தான் இந்த நாட்டில் முப்பது வருடங்களுக்கு மேலாக கொடும் யுத்தம் நடந்தது. இதை விமல் வீரவன்ச மறந்து விடக்கூடாது. பாராளுமன்றத்தில் ஏதேனும் பிரேரணை சமர்ப்பிப்பது என்றால் கூட சிங்களம் தமிழ் இரண்டு மொழிகளிலும் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால் அந்தப் பிரேரணையானது நிராகரிக்கப்பட இடமுண்டு என்பதை விமல் வீரவன்ச அறிய மாட்டாரா?

பிற மொழியையும் பிற மனிதர்களையும் எப்படி மதிக்க வேண்டும் என்பதை வீரவன்ச சிங்கப்பூர் விமான நிலையத்தில் சென்று படித்து விட்டு வரட்டும்.யுத்தத்தில் இருந்து சிங்கள தேசம் இன்னும் பாடம் கற்றுக் கொள்ளாமல் இருக்கிறது.

வீரமுள்ள அமைச்சர் என்றால் விமல் பார்த்த உடனேயே பெயர்ப்பலகையை மாற்றியிருக்க வேண்டும் .கொழும்பில் இருந்து கொண்டு அதை செய்யக்கூடாது என மேலும் தெரிவித்தார்.(9-350)

## முல்லை.விவசாயிகளிடமிருந்து

## நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக நெல்லினை கொள்வனவு செய்ய நடவடிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடனடியாக விவசாயிகளிடம் இருந்து நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப் படுத்தும் சபை ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தனியார் வியாபாரிகள் விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலையில் நெல்லினைக் கொள்வனவு செய்வதன் காரணமாக விவசாயிகள் பாதிக் கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நெல் சந்தைப்படுத்தும் சபை ஊடாக நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளது எனத் தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, வெலிஓயா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ்வாண்டு காலபோக நெல்லினை குறைந்த விலையில் விவசாயிகளிடம் இருந்து தனியார் வியாபாரிகள் கொள்வனவு செய்வதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலகங்களில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. நெல் சந்தைப்படுத்தும் சபையோ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களோ இதுவரை நெல்லினைக் கொள்வனவு செய்யவில்லை. இதன் காரணமாக தனியார் வியாபாரிகள் குறைந்த விலையில் நெல்லினைக் கொள்வனவு செய்வதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-350)




## ஆன்மீக பயணம்

கோப்பாய் வடக்கு மூத்தோர் சங்க உறுப்பினர்கள் ஆன்மீகப் பயணமொன்றை மன்னார் மாவட்டத்தின் திருத்தலங்களுக்கு இன்று வியாழக்கிழமை மேற்கொள்ளவுள்ளனர்.

திருக்கேதீஸ்வரம், மடு ஆகிய திருத்தலங்களுக்குச் சென்று தரிசிப்பதுடன் தலைமன்னார் துறை, மன்னார் நகரத்தின் பெருக்கு மரம் ஆகியவற்றையும் பார்வையிடவுள்ளனர். (9)

## கிளி.கல்விவலய ஆங்கில விவாத போட்டியும் பரிசளிப்பும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஆங்கில விவாதப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று காலை 9 மணிக்கு வலயக் கல்விப் பணிமனை முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும். இப்போட்டியில் ஆங்கில ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

## சிறுவர்களை மீளக் கற்றலில் இணைக்கும் செயற்பாடு கண்டாவளையில் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்திற்குட்பட்ட பரந்தன், சிவபுரம் ஆகிய பகுதிகளில் பாடசாலை செல்லாத மற்றும் ஒழுங்கற்ற வரவுகளைக்கொண்ட சிறுவர்களை மீளக்கற்றலில் இணைக்கும் செயற்பாடுகள் பல்வேறு தரப்பினராலும் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய கிராமப்புறங்களிலும் நகரப்பகுதிகளிலும் பாடசாலைகளுக்குச்செல்லாத அல்லது ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட மாணவர்களை மீளக் கற்றலில் இணைக்கின்ற செயற்பாடுகள் கடந்த ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டு 127 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாடசாலைகளிலும் சிறுவர் இல்லங்களிலும் நீதிமன்ற கட்டளைகளுக்கு அமைவாக இணைத்துக்கொண்டனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பரந்தன், குமரபுரம் ஆகிய பகுதிகளில் பாடசாலைகளுக்குச்செல்லாத மற்றும் ஒழுங்கற்ற வரவுகளைக்கொண்ட மாணவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களை மீளக்கற்றலில் இணைக்கும் நோக்கில் மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர், பரந்தன் கிராம உத்தியோகத்தர், நந்தகுமார் பரந்தன் பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், பரந்தன் இளைஞர் கழகத்தினர், ஆசிரியர்கள் , கிளிநொச்சி பொலிஸார் இணைந்து குறித்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது பாடசாலைகளுக்குச் செல்லாத மற்றும் ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட 11 சிறுவர்கள் பிடிக்கப்பட்டு பரந்தன் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் வைத்து எச்சரிக்கை செய்யப்பட்டு அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாடசாலை செல்லாத அல்லது ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட மாணவர்களை மீளப் பாடசாலைகளில் இணைக்கும் செயற்பாடுகள் ஏனைய பிரதேசங்களிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்டச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)




றோயல் முன்பள்ளி 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 2020 ஆம் ஆண்டில் மழலைகளை வரவேற்கும் புகுமுகவிழாவும், பொங்கல் விழாவும் கடந்த திங்கட்கிழமை றோயல் முன்பள்ளி அதிபர் கனகரத்தினம் அருள்செல்வம் தலைமையில் இடம்பெற்றது. (படம்:- குமார்)

## பம்பைமடுவில் தீப்பரவல்



(குருமன்காடு)

வவுனியா பம்பைமடுப் பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ பரம்பல் குடிமனையை நோக்கி நகர்ந்த நிலையில் நகரசபை தீயணைப்பு படையால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

வவுனியா, பம்பைமடுப் பகுதியில் நகரசபை மற்றும் பிரதேச சபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் இருந்த குப்பை மேட்டுக்கு இனந்தெரியாத நபர்கள் கடந்த திங்கட்கிழமை மாலை தீ வைத்திருந்தனர்.

குறித்த தீயானது குப்பை மேட்டில் எரிந்து படிப்படியாக நகர்ந்து காட்டுக்குள் சென்றது. இதனால் சாளம்பைக்குளம் புதிய குடியேற்ற பகுதியை நோக்கி தீ நேற்று முன்தினம் பரவிச் சென்ற நிலையில் வவுனியா நகரசபைக்கு தெரியப்படுத்தப்பட்டது.

விரைந்து செயற்பட்ட வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர் தீயணைப்பு வாகனத்தின் மூலம் தண்ணீர் பாய்ச்சி தீப்பரம்பலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தனர். இதனால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டது. (9-250)

# பாடசாலைகள், வைத்தியசாலைகளிலுள்ள குறைபாடுகளுக்கு விரைவில் தீர்வு

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



(குருமன்காடு)

பாடசாலைகள் மற்றும் வைத்திய சாலைகளின் குறைபாடுகள் தொடர்பாக ஜனாதிபதியின் அனுமதியுடன் விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்குட்பட்ட மக்களால் பிரதேச சபையின் உபதவிசாளர் வசந்த தலையில் வடமாகாண ஆளுநருக்கு வழங்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகள் மற்றும் வைத்திய சாலைகளின் குறைபாடுகள் தொடர்பாக இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக ஜனாதிபதியுடன் உரையாடியிருந்தோம். இவற்றுக்குரிய தீர்வுகளை உடனடியாக பெற்றுத் தருவதாக அவர் எமக்கு வாக்குறுதியளித்துள்ளார்.

எனவே இந்த இரு பிரச்சினைகளும் உடனடியாக தீர்த்து வைக்கப்படும். அதைவிட இந்தப் பிரதேசத்தில் வாழ்வாதாரத்திற்காக கஷ்டப்படும் வறுமையான மக்கள் பற்றியும் நான் அறிந்திருக்கின்றேன். வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களைப் பற்றி அறிந்திருக்கின்றேன்.

நல்லகுடிநீர் வசதி இல்லை என்பது தெரியும். உங்களில் பலருக்கு வீட்டு வசதி, மலசலகூட வசதி வழங்கப்படவில்லை என்பதும் தெரியும்.

எனவே இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் முழுமையாக எடுக்கப்படும். இன, மத, மொழி, வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பால் எல்லோரும் நீதியான சேவை தொடரும். அரசியல் காரணங்களுக்காகவோ அல்லது வேறு எந்த தனிப்பட்ட காரணங்களுக்காகவோ அநீதிகள் இழைக்கப்படுவதை தடுப்பேன். உங்களுக்கான தேவைகளை மாகாண நிர்வாகத்தின் ஊடாக ஏற்படுத்தி தருவேன் என மேலும் தெரிவித்தார். (9-250)

# ஆழ்துளைக் கிணறுகள் வேண்டாம்

## முல்லைத்தீவு பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு வற்றாப்பளையிலும் முள்ளியவளையின் புதிக்குடாவிலும் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகளைப் பயன்படுத்தவேண்டாம் என அப்பகுதி பொது அமைப்புகள் தமது எதிர்ப்புகளை வெளிப்படுத்தி உள்ளன.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற போது ஆழ்துளைக் கிணறுகளுக்கான எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன.

முல்லைத்தீவு நகரம் மற்றும் அதனை அண்டிய கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டத்திற்கென உலக வங்கி உதவியுடன் வற்றாப்பளையில் இரு ஆழ்துளைக் கிணறுகள் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் அமைக்கப்பட்டன.

இக்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டபோது அதன் தாக்கம் இப்பகுதி மக்களுக்கு தெரியவில்லை. ஆனால் குறித்த குழாய்க் கிணறுகளை நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்கு மேலாக பரீட்சார்த்தமாக நீரினைப் பெற்றபோதே அதன் தாக்கம் வெளிப்படத் தொடங்கியது.

வற்றாப்பளை மகா வித்தியாலயத்தின் குடிநீர்க் கிணறு முற்றாக நீர் வற்றி பிரதேச சபையின் மூலம் குடிநீரினைப் பெற்று மாணவர்களுக்கு வழங்கிய போதே இரு ஆழ்துளைக் கிணறுகளினால் ஏற்பட்ட தாக்கம் வெளிப்படத் தொடங்கியது.

வற்றாப்பளை, தண்ணிரூற்று, நீராவிப்பிட்டி இவ் ஆழ்துளைக் கிணறுகளைச் சூழவுள்ள திறந்த கிணறுகளின் நீர்மட்டம் விரைவாக அழிநிலையினைச் சென்றடைந்தது. இதனையடுத்து ஆழ்துளைக் கிணறுகளுக்கு எதிரான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடமும் மனுக்கள் மூலமும் நேரடியாகவும் விடயங்கள் தெரியப்படுத்தப்பட்டன.

அதனடிப்படையில் முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு விடயங்கள் ஆராயப்பட்டன. இக்குழுவில் இடம்பெற்றவர்களினால் வற்றாப்பளையில் அமைக்கப்பட்டுள்ளஆழ்துளைக் கிணறுகள் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டன.

வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணிரூற்று, நீராவிப்பிட்டி, மாமூலை, தண்டுவான் வரையில் எதிர்காலத்தில் ஆழ்துளைக் கிணறுகள் பயன்படுத்தும் போது உவர்ப்பரம்பக் கூடியநிலைமை ஏற்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

முத்தையன்கட்டுக்குளம் உட்பட பெருமளவுநீர் நந்திக் கடல் வழியாக பெருங்கடலையைச் சென்றடையும் நிலையில் இப்பகுதியில் பொருத்தமான இடத்தில் நீர்த்தேக்கம் ஒன்றினை உருவாக்கி முல்லை நகரத்திற்கான குடிநீர் வழங்கலை மேற்கொள்ளலாம்.

அதனைவிட முள்ளியவளை வடக்கில்இயற்கை ஊற்றுகளைக்கொண்ட குஞ்சுக் குளத்தினைப் பயன்படுத்தி குடிநீர்த் திட்டத்தினை நடை முறைப்படுத்தலாம் என்றவிடயங்கள் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆழ்துளைக் கிணற்றின் மூலம் தான் முல்லைத்தீவு நகரத்திற்கு குடிநீர் வழங்குவோம் எனச்செயற்படுவதாகவும் பொது அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

குறித்ததிட்டம் தொடங்கும் போது கிராம மக்களுடனோ பொது அமைப்புகளுடனோ கலந்துரையாடல்கள் நடத்தப்படவில்லை. ஆழ்துளைக் கிணறுகளினால் ஆபத்து உள்ளதன் காரணமாக குஞ்சுக்குளத்தினை முல்லைத்தீவு நகரத்திற்கான நீர் மூலகமாகப் பயன்படுத்தலாம். ஆழ்துளைக் கிணறுகளைப் பயன்படுத்துவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்துளைக் கிணறுகள் பயன்படுத்தப்பட்டால் இப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான தென்னைகள் அழிவடையும். முல்லைத்தீவு நகரத்திற்கான குடிநீர் திட்டத்திற்கு பொது அமைப்புகள் வலியுறுத்தும் குஞ்சுக் குளத்தினைப் பயன்படுத்த நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை முன் வரவேண்டும் எனவும் குறித்த கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (9-350)

## நிவாரணப் பொருட்கள் கையளிப்பு



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் ஒன்றான வெள்ளாங்குளம் சேவா கிராமத்தில் வெள்ளம் மற்றும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட ஐம்பது குடும்பங்களுக்கான நிவாரணப் பொருட்கள் நேற்று முன்தினம் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் மெசிடோ ஏற்பாட்டில் அதன் குழு தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிவாரணப் பொருட்கள் கையளிக்கும் நிகழ்வில் சட்டத்தரணி புராதனி மற்றும் மெசிடோ நிறுவன ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (9-285)






# முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் 21173 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றம்

(கண்டாவளை)

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஸாப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது ஈடுபட்டு வருகிறது.

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2020 ஜனவரி மாதம் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழுள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழுள்ள முகமாலையிலும் ஒன்பது இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து அறுநூற்று எழுபது சதுரமீற்றர் பரப்பளவில் (969, 670sqm) இருந்து இருபத்தொராயிரத்து நூற்று எழுபத்து மூன்று (21,173) அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளது.



தொடர்ந்து இந் நிறுவனம் கண்ணி வெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வரும் என நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார். (9-315)

## அபிராமிப்பட்டர் விழா

(முரசுமோட்டை)

கிளிநொச்சி தய்யா பகுதியில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க பொறிக்கடவை அம்மன் ஆலயத்தின் வருடாந்த "அபிராமிப்பட்டர்" விழா நாளை வெள்ளிக்கிழமை அன்று இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு அம்மனுக்கு அபிஷேக நிகழ்வு இடம்பெறுவதை தொடர்ந்து அன்னதான நிகழ்வு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வாக சமய சொற்பொழிவும் அம்மன் வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (9-318)

# பாரதம்


# அயோத்தியில் மூன்று மாதத்தில் ராமர் கோயில் கட்டப்படும்

## அமித்ஷா திட்டவட்டம்

(டில்லி)

அயோத்தியில் மூன்று மாதத்தில் ராமர் கோவில் கட்டப்படும் என உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார்.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'அயோத்தி ராமர் கோவில் விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தில் வாதாடிய காங்கிரஸ் தலைவர்கள் கூட அயோத்தி வழக்கின் தீர்ப்பை கேட்கவில்லை.

இது அவர்களது ராமர் கோவில் பற்றிய உண்மையான புரிதலை காட்டுகிறது. ஆனால் நீதிமன்றம் தனது தீர்ப்பை வெளியிட்டுவிட்டது. எனவே இப்போது பிரமாண்ட ராமர் கோவில் கட்டப்படும்.

இப்போதும் காங்கிரஸ் அரசு இருந்தால் இந்த கோவிலை கட்டுவதற்கு அவர்கள் அனைத்து வகையிலும் இடையூறு செய்வார்கள். ஆனால்நான் இப்போது உறுதியளிக்கிறேன், 3 மாத காலத்தில் வானுயர்ந்த ராமர் கோவில் கட்டப்படும்' என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# நேபாள விடுதியில் வாயுக்கசிவு; எட்டு இந்தியர்கள் உயிரிழப்பு!

(காத்மண்டு)

நேபாளத்தில் விடுதி ஒன்றில் ஏற்பட்ட வாயுக்கசிவில் சிக்கி இந்தியாவைச் சேர்ந்த 4 குழந்தைகள் உட்பட 8 சுற்றுலாப்பயணிகள் உயிரிழந்தனர். கேரள மாநிலத்தை சேர்ந்த 15 பேர் நேபாளத்திற்கு சென்றிருந்தனர். இவர்கள் எவரெஸ்ட்டில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்தனர்.

கதவு, ஜன்னல்கள் என அனைத்தையும் இறுக்கமாக மூடியிருந்த அவர்கள், குளிர் காய்வதற்காக GAS HEATER ஐ பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் போதிய காற்றோட்ட வசதி இல்லாத சூழல் ஏற்பட்டு வாயு நெடியில் சிக்கி 8 பேரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்களை இந்தியா கொண்டுவர நேபாளத்திற்கான இந்திய தூதரக அதிகாரிகள் போதிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலையும் அவர் தெரிவித்தார். (ஜ-2)



# காஷ்மீர் பிரச்சினைக்கு நடுவுநிலை வகிக்க தயார்

## ட்ரம்ப் தெரிவிப்பு



(டாவோஸ்)

இந்தியா-பாகிஸ்தான் இடையேயான காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, உதவி செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார கூட்டமைப்பின் மாநாடு நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், மாநாட்டின் இடையே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்து பேசினார்.

அப்போது இரு தரப்பு உறவுகள் மற்றும் இந்தியாவுடனான காஷ்மீர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இருவரும் பேசினர்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் இருவரும் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய ட்ரம்ப், இந்தியா-பாகிஸ்தான் இடையேயான காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

'காஷ்மீரைப் பற்றியும், பாகிஸ்தான் மற்றும் இந்தியா இடையே என்ன நடக்கிறது என்பது பற்றியும் இருவரும் பேசினோம். எங்களால் உதவ முடிந்தால், நாங்கள் நிச்சயமாக உதவுவோம். இரு நாடுகளுக்கிடையிலான பிரச்சினையை அமெரிக்கா தீவிரமாக கண்காணித்து வருகிறது' என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

'இந்தியாவுடனான பிரச்சினை பெரிய பிரச்சினை. வேறு எந்த நாட்டினாலும் முடியாது என்பதால், இந்த பிரச்சினையை தீர்ப்பதில் அமெரிக்கா தனது பங்கை வகிக்கும் என்று நாங்கள் எப்போதும் நம்புகிறோம்' என இம்ரான் கான் கூறினார்.

காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாவது நாடு மத்தியஸ்தம் செய்வதற்கு இந்தியா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் இதில் தலையிட ஆர்வம் காட்டுகிறார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து இரத்து செய்யப்பட்ட பிறகு 4ஆவது முறையாக காஷ்மீர் விடயத்தில் ட்ரம்ப் தனது விருப்பத்தை கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)


# அமேசன் ... ஊடுருவி ...

(றியாத்)

**அமேசன் நிறுவனத்தி... தொலைபேசியை சவுதி... 2018 இல் ஊடுருவி தக... செய்தி வெளியிட்டது.**

சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் முகமது பின் சல்மானின் தனிப்பட்ட வட்ஸ் அப் முகவரியிலிருந்து அனுப்பப்பட்ட தகவலொன்றை தொடர்ந்து அமே...

# ரஷ்யாவில் ... 11பேர் உடல் ...



(மொஸ்கோ)

ரஷ்யாவின் பிரிச்சுலிம்ஸ்கி கிராமத்தில்... டடம் திடீரென தீப்பிடித்து எரிந்து விபத்... ளானதில் 11 பேர் தீயில் உடல் கருகி... இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்...

ரஷ்யாவின் டாம்ஸ்க் பிராந்தியத்தி...

# ன் நிறுவனத்தலைவரின் தொலைபேசிக்குள்
# வி தகவல்களை திருடிய சவுதி இளவரசர்

**னத்தின் தலைவர் ஜெவ் பெஜோசின் கையடக்க சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் ருவி தகவல்களை திருடினார் என கார்டியன் டது.**

குரிய
தனிப்
அனுப்
அமே

சன் தலைவரின் கையடக்க தொலைபேசி ஊடுருவல் செய்யப்பட்டது என கார்டியன் சுட்டிக்காட்டியது.

முகமது பின் சல்மான் பயன்படுத்தும் இலக்கத்திலிருந்து சென்ற இரகசிய செய்தியில் பல ஆபத்தான ஆவணக் கோப்புகள் காணப்பட்டன.



அவை அமேசன் தலைவரின் கையடக்க தொலைபேசிக்குள் ஊருடுவின என கார்டியன் சுட்டிக்காட்டியுள்ளது.

டிஜிட்டல் தடயவியல் பகுப்பாய்வின் போது இந்த விடயம் தெரிய வந்துள்ளது. ஆபத்தான காணொலியின் மூலம் இந்த ஊருவல் இடம் பெற்றிருப்பதற்கான வாய்ப்புள்ளதாக டிஜிட்டல் தடயவியல் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

2018 மே மாதம் இருவரும் தொலைபேசி மூலம் உரையாடிக் கொண்டிருந்தவேளை இந்த ஆபத்தான காணொலி அனுப்பப்பட்டிருக்கலாம் என ஊகங்கள் வெளியாகின.

இந்த ஊருடுவல் மூலம் அமேசன் தலைவரின் கையடக்க தொலைபேசியிலிருந்து ஒரு சில மணித்தியாலத்திற்குள் பெருமளவு தகவல்களை திருடியுள்ளனர் என கார்டியன் தெரிவித்துள்ளது.

அமேசன் தலைவரின் கையடக்க தொலைபேசிக்குள் சவுதி அரேபிய இளவரசர் ஊருடுவிய தகவல் அமெரிக்காவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஜ-2)

# ில் மரக்கட்டடத்தில் தீ
# டடல் கருகி உயிரிழப்பு!



பிரிச்சுலிம்ஸ்கி கிராமத்தில் இருந்த ஒரு மரக் கட்டடம் நேற்று முன்தினம் அதிகாலையில் திடீரென தீப்பிடித்து எரிந்தது. இது குறித்து தகவல் அறிந்த தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஆனால் அந்த கட்டடம் முழுவதும் மரத்தினாலேயே கட்டப்பட்டு இருந்ததால், தீ வேகமாக பரவியது. கட்டடத்தில் இருந்தவர்கள் அலறி துடித்தனர். தீயணைப்பு வீரர்களின் நீண்டநேர முயற்சிக்கு பின்னர் அங்கிருந்து 2 பேரை மட்டுமே உயிருடன் காப்பாற்ற முடிந்தது. 11 பேர் தீயில் உடல் கருகி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

கரிக்கட்டையாக கிடந்த அவர்கள் உடல்கள் மீட்கப்பட்டன. இந்த தீவிபத்துக்கான காரணம் உடனடியாக தெரியவில்லை. யாரேனும் அந்த கட்டடத்துக்கு தீ வைத்து இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை நடைபெற்று வருகிறது. (ஜ-2)

கிராமத்தில் மரக்கட்
ரிந்து விபத்துக்குள்
உடல் கருகி சம்பவ
யிரிழந்தனர்.
ாந்தியத்தில் உள்ள

# சீனாவில் பரவும் புதிய வைரஸ்; 9 பேர் பலி; 440 பேர் பாதிப்பு!


(பீஜிங்)

சீனாவின் உஹான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வைரஸின் தாக்கத்தினால் இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளதுடன், 440 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் 9 பேரைக் கொன்ற கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் அமெரிக்காவில் முதன் முறையாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சீனாவில் 9 பேரை கொலை செய்து நூற்றுக்கணக்கான மக்களை பாதிப்புக்குள்ளாக்கிய மர்மமான கொரோனா வைரஸால் வோஷிங்டன் மாநிலத்திலுள்ள 30 வயதுடைய நபர் ஒருவர் பாதிக்கப்பட்டதாக அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் நோய் தடுப்பு மையங்கள் நேற்றைய தினம் உறுதிப்படுத்தியுள்ளன.

கடந்த ஜனவரி 15 ஆம் திகதி சீனாவுக்கு சென்ற நபர் அமெரிக்காவுக்கு திருப்பி வந்தபோது நிமோனியா போன்ற தாக்க அறிகுறிகள் தனக்கு தென்பட்டதனால் அவர் உள்ளூர் சுகாதார அதிகாரிகளை அணுகியுள்ளார். இதன்போது மேற்கொண்ட பரிசோதனைகளில்அவர்கொரோனா வைரஸின் தாக்கத்துக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.



குறித்த நபர் தற்போது வோஷிங்டனிலுள்ள வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்பட்ட அறையில் மிகவும் பாதுகாப்பாக சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொடர்பில் அனைத்து மாநிலங்களிலும் முன்னெச்சரிக்கையுடன் உள்ளதாக நோய் கட்டுப்பாடு மற்றும் நோய் தடுப்பு மையத்தினர் தெரிவித்தனர். (ஜ-2)

செய்தி
ரம்ப்,
ர் பிரச்
தெரி
ம் இந்
ரியும்
முடிந்
நாடு
ரிக்கா
ட்ரம்ப்
பிரச்
யாது
அமெ
ங்கள்
கான்
டு மத்
திர்ப்பு
ாதிபதி
காட்டு
தஸ்து
யாக
த்தை
(ஜ-2)

# அணுவாயுத பரிசோதனை முயற்சிகளை எந்த உடன்படிக்கையும் கட்டுப்படுத்தவில்லை

## வடகொரியா அறிவிப்பு

(பியாங்யாங்)

அணுவாயுதம் மற்றும் ஏவுகணைப் பரிசோதனை முயற்சிகளை, எந்த உடன்படிக்கையும் கட்டுப்படுத்தவில்லை என வடகொரியா அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வட கொரியா இதுகுறித்த அறிவித்தலை வெளியிட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மேலும், அணுவாயுதம் தொடர்பாக கடந்த ஆண்டு இறுதியில் இடம்பெறவிருந்ததாக கூறப்படும் பேச்சுவார்த்தை நடைபெறாமை தொடர்பாகவும் வடகொரியா அமெரிக்கா மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் மிருகத்தனமானதும் மனிதாபிமானம் அற்றது எனவும் வடகொரியா தெரிவித்துள்ளது. (ஜ-2)



# குடியுரிமைச் சட்டத்திற்கு இடைக்கால தடையில்லை
## உச்ச நீதிமன்றம் அறிவிப்பு

(டில்லி)

மத்திய அரசு அமுல்படுத்தியுள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு இடைக்கால தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மீண்டும் மறுத்துள்ளது. மேலும் இந்த வழக்குகள் அனைத்தும் அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட உள்ளன. குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் எதிர்க் கட்சிகள், பல்வேறு அமைப்புகள் போராட்டம் நடத்தி வருகின்றன.

காங்கிரஸ் கட்சியின் ஜெயராம்ரமேஷ், திமுக, மக்கள் நீதி மய்யம், திரிணாமுல் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் என பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் தனி நபர்கள் சார்பில், குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் கடந்த மாதம் தலைமை நீதிபதி பாப்டே தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசு பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. அத்துடன், குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு இடைக்கால தடை விதிக்கவும் நீதிபதிகள் மறுத்துவிட்டனர்.

இந்நிலையில் குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு எதிரான 144 மனுக்கள் மீது உச்ச நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணை நடைபெற்றது. தலைமை நீதிபதி பாப்டே தலைமையிலான அமர்வு விசாரணை நடத்தியது. அப்போது, குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என மனுதாரர்கள் தரப்பில் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# நூறு குரல் பதிவுகள் வெளியானாலும் நான் அஞ்சமாட்டேன்!

## ஹிருணிகா திட்டவட்டம்

(கொழும்பு)

**நான் கொலை செய்யவில்லை, கொள்ளையடிக்கவில்லை, எனவே நூறு குரல் பதிவுகள் வெளியானாலும் அஞ்ச மாட்டேன் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.**



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'எல்லோரும் சேர்ந்து இன்று என் மீது கல்லெறிகின்றனர். நான் அதற்கு கவலைப்படப் போவதில்லை.

இங்குள்ள எல்லோரும் சுற்றவாளிகள் போல நடித்து மற்றவர்களைப் பற்றி தேடுகின்றனர். என் மீது நூறு கற்கள் வீசினாலும் இப்படியான நூறு குரல் பதிவுகள் வெளியானாலும் நான் அஞ்சமாட்டேன்.

நான் கொலை செய்யவில்லை. கொள்ளையடிக்கவில்லை. நாட்டின் மக்கள் பிரச்சினையில் இருக்கும்போது இவற்றை வெளியிடுகின்றனர். நான் இதுகுறித்து சி.ஐ.டியில்முறைப்பாடொன்றை செய்தேன்.

விரைவில் நான் சம்பந்தப்பட்ட தொலைக்காட்சிகளுக்கு எதிராக மானநட்ட வழக்கு தொடரவுள்ளேன். அதில் கிடைக்கும் பணத்தை ஏழைகளுக்கு பகிர்ந்தளிப்பேன். பொலிஸார் இந்த குரல் பதிவுகளை தனியார் தொலைக்காட்சி உரிமையாளர்களுக்கு விற்றுள்ளனர்.

அவர்கள் இதனை திரிபுபடுத்தி வெளியிடுகின்றனர். நாமலுடன் நான் நட்பாக இருந்ததாக கூறினார். இது உண்மையா? என்று நாமலிடம் கேளுங்கள். தமக்கு தேவையானவற்றை மட்டும் வெளியிடுகின்றனர்.

இன்று நாட்டில் கோட்டாவோ மகிந்தவோ ஆட்சி செய்யவில்லை. தனியார் தொலைக்காட்சி உரிமையாளர் ஒருவர் தான் அதனைச் செய்கிறார். தனது தம்பியை சிறையில் இருந்து விடுவிக்க அவர் எதையும் செய்வார்.

அப்படி செய்து அவர் பிரதமராகவும் வரலாம். எனது தந்தையை கொலை செய்தது ஒரு சதி. அதனைச் செய்தது துமிந்த சில்வா. அதனால் தான் அவருக்கு தண்டனை கிடைத்தது.

அதில் மறைக்க ஒன்றுமில்லை. எம் மீது சேறு பூசும் நடவடிக்கைகளை செய்கின்றனர். 'பிரிசன் ப்ரேக்' பாகம் இரண்டு என்ற படமே இப்போது ஓடிக்கொண்டிருக்கிறது.

யாராலும் என்னை வீழ்த்த முடியாது. அப்படி யாராவது நினைத்தால் அது தவறு என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நான் கொண்டிருந்த நட்பு குறித்து ரஞ்சன் ராமநாயக்க பகிரங்கமாக விளக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சம்மாந்துறையில் ரி-56 ரக துப்பாக்கி மீட்பு



(சம்மாந்துறை)

சம்மாந்துறை பகுதியில் காணி ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ரி-56 ரக துப்பாக்கி ஒன்று விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டது.

விசேட அதிரடிப்படையினரின் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மலையடிவாரம் பகுதியில் இருந்து குறித்த துப்பாக்கியை மீட்ட விசேட அதிரடிப்படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு உரப்பையினுள் சுற்றப்பட்ட நிலையில் மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்த குறித்த துப்பாக்கி இயங்கு நிலையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் துப்பாக்கியுடன் இரு ரவைக்கூடுகளும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வாழ்வாதார உதவிகள் வழங்கல்



(குப்பிழான்)

யாழ். வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் நான்கு குடும்பங்களுக்கு அகரம் உதவும் கரங்கள் நலன்புரிச் சங்கத்தினர் வாழ்வாதார உதவிகளையும் அவர்களது பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்களையும் அண்மையில் வழங்கினர்.

இந் நிகழ்வு குடத்தனை வடக்கில் அமைந்துள்ள அகரம் வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இவ் உதவிகளுக்கான நிதிப் பங்களிப்புகளைப் புலம்பெயர்ந்து சுவிஸ் மற்றும் லண்டனில் வாழும் மக்கள் வழங்கியிருந்தனர். (ஜ-2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## முதல் உதவி

ஒரு ஆசாமி வேகமாக ஓடிக் கொண்டு இருந்தான்.ஏன் இப்படி ஓடுகிறாய் என்று கேட்டார் இன்னொருவர். அங்கே ஒரு ஆளு அடிபட்டுக் கிடக்கிறான் அதைப் பார்த்தேன் உடனே ஓடுகிறேன் என்றான். எங்கே என்று கேட்டார்.வைத்தியசாலைக்கு என்றான். ஒருவர் அடிபட்டுக் கிடப்பதைப் பார்த்தால் நாம முதலில் செய்வது முதல் உதவி... அதுக்கப்புறம் தான் வைத்தியசாலை. இன்றைக்கு விபத்து என்பது சர்வசாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது... வாகன விபத்து.. வெடிகுண்டு விபத்து... தீ விபத்து.. கட்டடம் சரிகிறது.. பூகம்பம்.. இப்படி நிறைய நடக்கிறது.

ஒரு விபத்தைப் பார்த்து விட்டால் நம்முள் பலபேர் நமக்கு எதற்கு வம்பு என்று ஒதுங்கிப் போய்விடுவதும் உண்டு... சில பேர் துணிந்து கொண்டு போய் உதவி செய்வதும் உண்டு... அப்படி உதவி செய்ய நினைக்கிறவர்களுக்கு உபயோகப்படுகிற தகவல் இது. விபத்திலே காயமடைந்தவர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

முதல் வகை... கொஞ்சம் சீரியஸ் ஆனது! உயிருக்கு உடனே ஆபத்துத் தரக்கூடியது. மூளைக் காயம்... முகம் கழுத்துக் காயங்கள் இருதயம் நுரையீரல் காயங்கள் வயிற்றின் உள்ளுறுப்புக் காயங்கள்..அதிகப்படியான இரத்தப் போக்கு இதனாலேயெல்லாம் பாதிக்கப்பட்டிருந்தால் அது முதல் வகை என்று நாம் மனதுக்குள்ளே நினைத்துக் கொள்ள வேண்டும். இவர்களுக்கெல்லாம் உடனடியாக முதல் உதவி கொடுக்க வேண்டும்.தாமதப்படுத்தாமல் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று விட வேண்டும். இப்படி கொஞ்சம் எச்சரிக்கையாக நடந்து கொண்டால் அவர்களே பல பேரைக் காப்பாற்றி விடலாம்.

இரண்டாவது வகை எப்படி என்றால்.. முதல் உதவி விரைவாகக் கிடைத்தால் உயிர் பிழைக்கக் கூடிய மார்புக் காயங்கள் கை, கால் எலும்பு முறிவு, இடுப்பு முதுகெலும்புக் காயங்கள், சீரான இரத்த சேதம் இப்படிப்பட்டவர்களை இரண்டு வகையாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஆபத்து இல்லா சிராய்ப்புகள்... சிறு காயங்கள், இரத்த உறைவுகள் இதனாலே பாதிக்கப்பட்டவர்கள் மூன்றாவது வகை.

ஒருவர் தலையிலே அடிபட்டு நினைவிழுந்து விட்டார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு வாந்தி வருவதனாலே புரையேறி மூச்சு அடைப்பு உண்டாகும். இப்படி ஆகாமல் இருக்க தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து வைத்துக் கொள்ளலாம்.நாடித் துடிப்பையும் இதயத்துடிப்பையும் தொட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அது குறைந்திருந்தாலும் சரி நின்று இருந்தாலும் சரி அவர் மார்பை நிமிஷத்திற்கு 80 தடவை உள்ளங்கையாலே அழுத்தி (Cardiac Massage) இதயத்துடிப்பை மீட்பதற்கு உதவ வேண்டும். கழுத்திலே காயம் பட்டாலும் ஆபத்து அதிகம். கழுத்துக்கு அடியில் ஒரு துண்டை மடித்து வைக்கலாம். இரண்டு பக்கமும் சிறு தலையணை அல்லது துணி மடிப்புக்களை வைத்து கழுத்து அதிகமாக அசையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முதுகு எலும்பு முறிந்திருக்கிறது என்ற சந்தேகம் இருந்தால் அவரை அதிகமாக அசையவிடக் கூடாது. அதிகமாக அசைந்தால் தண்டு வடத்திலே பாதிப்பு ஏற்பட்டு கை,கால் விளங்காமல் போய்விடும்.

அவரை ஒரு கனமான போர்வை அல்லது பாயிலோ படுக்க வைத்து நாலு பேர் மெதுவாகத் தூக்கி மருத்துவ உதவிக்கு அனுப்பி வைக்க வேண்டும். கை எலும்பு முறிந்திருந்தால் முறிந்த பாகத்தை உடம்போடு சேர்த்து அசையாது கட்டி விடலாம். முறிந்த பாகம் தொங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச்செய்தால் வீக்கம் உண்டாகாமல் இருக்கும்.

வெட்டுக்காயம், குண்டு அடிப்பட்ட காயம் இவற்றில் இரத்தப் போக்கு அதிகமாக இருக்கும். இரத்தம் வெளியேற வெளியேற ஆபத்து அதிகம். சுத்தமான துணியைப் பல மடிப்புக்களாக மடித்து கழுத்தின் மேலே வைத்து அழுத்தமாக ஒரு பத்து நிமிடம் பிடித்திருக்க வேண்டும்.

இரத்தம் நின்றவுடனே காயத்துக்கு கட்டுப் போடலாம். சில சமயம் காயம் பட்ட பாகத்தை உயரமாத் தூக்கிப் பிடித்துக் கொண்டால் தான் இரத்த கசிவு நிற்கும்.

இந்த விபரங்களையெல்லாம் கொஞ்சம் மனதில் தெரிந்து வைத்துக் கொண்டால் சமயத்திலே உதவும்.ஏனென்றால் இந்தக் காலத்தில் விபத்து எநத ரூபத்திலே வரும் என்று யூகிக்கவே முடியவில்லை சேர். நண்பர் ஒருத்தர் சொன்னார். நேற்று பாருங்க சேர் என் கண் முன்னாலேயே ஒரு சிறிய விபத்து நடந்தது என்றார். என்ன என்று விசாரித்தேன்.

ஒரு பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன். அந்த பஸ்ஸில் பின்பக்கம் படி ஓரமாக நின்று கொண்டிருந்த ஒருத்தர் ரோட்டிலே விழுந்து விட்டார். சாரதி அதைக் கவனிக்கவில்லை. நிறுத்தாமல் அவர் போய்க்கொண்டிருந்தார். நடத்துநர் உடனே விசில் கொடுத்து பஸ்ஸை நிறுத்த வேண்டியது தானே என்றேன். அதுதான் சேர் முடியாமல் போய்விட்டது என்றார் அது ஏன் என்று கேட்டேன் தவறிக் கீழே விழுந்தது அவர் தானே அப்படி என்றார்.

# கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா - 2020

உலகப் புகழ்பெற்ற பின்னணிப்பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் இவ்வாண்டின் 'கம்பன்புகழ்' விருதினைப் பெறுகிறார். அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் இவ்வாண்டு கொழும்புக் கம்பன்விழா எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதி முதல் பெப்ரவரி 4ஆம் திகதிவரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கம்பன் புகழ் விருது 2020



கௌரவம் பெறும் சான்றோர்கள்

மாண்புமிகு எஸ். துரைராஜா | திரு. அ. முத்துலிங்கம் | கௌரவ. எம். ஏ. சுமந்திரன் | திரு. குமார் சங்கக்கார | திரு. வே. சிவஞானசோதி | திரு. ஏ. எம். நஹியா

இலங்கையில் கம்பன் கழகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 40 வருடங்கள் பூர்த்தியாவதுடன் கொழும்பில் அதன் பணிகள் தொடங்கி 25 ஆண்டுகள் நிறை வடைந்துள்ளன. அதனால் இவ்வாண்டுக் கம்பன் விழா இறையருளை முன்னிட்டு கொழும்புக் கம்பன் கழகத்தின் வெள்ளி விழாவாக மிகப் பிரமாண்டமாக நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கம்பன் விழாவின் முதல் நாளான ஜனவரி 31ஆம் திகதி வெள்ளி மாலை 5 மணிக்கு, இராம கிருஷ்ண தோட்டம், இல. 12 இல் அமைந்துள்ள ஸ்ரீ ஐஸ்வர்யலஷ்மி கோயிலிலிருந்து கம்பன் திருவுருவப் படமும் சீதா இராம விக்கிரகங்களும் ஊர்வலமாக விழாமண்டபம் நோக்கி எடுத்துவரப்படவுள்ளன.

இவ் ஊர்வலத்தில் நம் நாட்டின் பல பாகங்களிலிருந்து வருகைதரும் பிரமுகர்களும் இந்தியா, மலேசியா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா ஆகிய நாடுகளிலிருந்து வருகைதரவுள்ள அறிஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இலங் கையின் பிரபல நாதஸ்வர, தவில் வித்து வான்களின் மங்கள இசையும், கல்லூரி மாணவர்களின் கீழைத்தேய வாத்திய இசையும், மங்கையர்களின் நிறைகுட பவனியும், நடன மங்கையர்களின் அபிநய பவனியுமாக இவ் ஊர்வலம் சிறப்புற நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் இவ்விழாவின் திருநாள் மங்கல நிகழ்வை திருக்கேதீஸ்வரர் ஆலயத் திருப்பணி சபையின் இணைச்செயலர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்க, யாழ். மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்புக் கம்பன்கழகப் பெருந்தலைவருமான ஜெ.விஸ்வநாதன் தலைமையேற்று நிகழ்வுகளை நடாத்தவுள்ளார்.

விழாவில் கலந்துகொள்ளும் வெளிநாட்டு அரசியல் பிரமுகர்கள் மலேசிய நாட்டு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறையின் முன்னாள் பிரதியமைச்சரானடத்தோ. ஸ்ரீ எம். சரவணன், புதுச்சேரி சட்டசபையின் சபாநாயகர் வி.பி. சிவக்கொழுந்து, இந்தியப் பாராளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும் தற்போதைய பாரதீய ஜனதா கட்சியின் மூத்த உறுப்பின ருமான இல. கணேசனும் இம்முறை விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

விழாவில் கலந்துகொள்ளும் நம் நாட்டு அரசியல் பிரமுகர்கள் கால்நடை வள கிராமிய சமூக அபிவிருத்தி அமை ச்சர் ஆறுமுகம் தொண்டமான், முன் னாள் கல்வி இராஜாங்க அமைச்சர், கலாநிதி வே. இராதாகிருஷ்ணன், முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், வடமாகாண சபை முன்னாள் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், பாரா ளுமன்ற உறுப்பினர் மாவை. சேனா திராசா, மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், கொழும்பு மாநகர முதல்வர் ரோஸி சேனநாயக்க, சைவ மங்கையர் கழகத் தலைவி. திருமதி சிவானந்தி துரைசாமி, முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர், சு. அருமைநாயகம் முதலிய பிரமுகர் பலரும் இவ்வாண்டு விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விழாவில் கொழும்புக் கம்பன் கழக வெள்ளி விழா மலரும், அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பதினைந்தாண்டின் நிழற்படத் தொகுப்பும், கம்பன் விழா 2018, இசை விழா 2018, 2019 ஆகியவற்றின் இறுவெ ட்டுகளும் வெளியிடப்படவுள்ளன. சமூக நிதியுதவி கழகத்தின் இவ்வாண்டு விழாவில் சமூக நிறுவனங்கள், வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்டிருந்தும் கல்வியில் சாதனை செய்த மாணவர்கள், வளர்ச்சிக்கான துணை தேவைப்படும் குடும்பங்கள் எனப் பல தரப்பட்ட பேருக்கும் நிதியுதவிகளும் வழங்கப்படவுள்ளன.

'வி.ரி.வி. பவுண்டேஷன்' நிறுவியுள்ள வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை நினைவு அறக்கட்டளை வழங்கும் இக் 'கம்பன்புகழ் விருது', இவ்வாண்டு இந்தியாவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற சினிமா பின்னணிப்பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்திற்கு அவர்தம் இசைத்தமிழ் பங்களிப்பினை மனங்கொண்டு வழங்கப் டவுள்ளது.

விருதுக் கேடயம், பொன்னாடை, இந்தியப் பணம் ரூபா ஒரு இலட்சம் பொற்கிழி ஆகியவற்றுடன் கூடிய இவ்விருதினை, கம்பன்விழாவின் நிறைவு நாளன்று மாலை கழகப்பெருந்தலைவர் நீதியரசர் ஜெ.விஸ்வநாதன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

சுயநலமற்ற செயற்பாடுகளால் நம் நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் அறுவரை ஆண்டு தோறும் கொழும்புக் கம்பன் கழகம் கௌரவித்து வருகிறது.

அவ்வரிசையில் இவ்வாண்டு கௌரவத்துக்குரியவர்களாக, உச்ச நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா, புகழ்பெற்ற எழுத்தாளர் அ.முத்துலிங்கம் (கனடா), பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார, முன்னாள் பிரதமரின் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, எல்லை நிர்ணய ஆணைக்குழு உறுப்பினர் ஏ. எம். நஹியா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குரியதான கௌரவங்களும் விழாவின் நிறைவு நாளில் சகல மரியாதைகளுடனும் வழங்கப்படவுள்ளன. இவ்வாண்டுக்கான அறக்கட்டளை விருதுகள் பெறுவோர் கம்பன் விழாவில் வருடாந்தம் ஐந்து அறக்கட்டளை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு நாவலர் நற்பணி மன்றத்தின் தலைவர் அமரர் என். கருணைஆனந்தன் நிறுவியுள்ள 'நாவலர் விருதினை' தமிழ் நாட்டைச் சேர்ந்த சிறந்த உரையாசிரியரான பள்ளத்தூர் பழ.பழனியப்பனும் தமிழ்நாடு திருக்குவளை இராமஸ்ரீநிவாசன் மங்கையர்க்கரசி நினைவு அறக்கட்டளையினர் நிறுவியுள்ள 'விபுலாநந்தர் விருதினை' நாட்டிய கலாமந்திர் இயக்குநர், நடன ஆசிரியை கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனும், 'கவிக்கோ' அமரர் அப்துல் ரகுமான் (தமிழ்நாடு) நிறுவிய 'மகரந்தச்சிறகு விருதினை' இலங்கையின் சிறந்த கவிஞர்களில் ஒருவரான கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீனும், புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் (தமிழ்நாடு) நினைவாக குடும்பத்தினர் நிறுவியுள்ள 'நுழைபுலம் ஆய்வு விருதினை' பேராசிரியர் ப. புஸ்பரட்ணமும், புகழ்பெற்ற தமிழகப் பேராசிரியர் சாலமன் பாப்பையா நிறுவியுள்ள 'ஏற்றமிகு இளைஞர்' விருதினை எழுத்தாளர் தீபச்செல்வனும் பெற்றுக் கொள்கின்றனர்.

## அறக்கட்டளை விருதாளர்கள்



'நாவலர் விருது' பள்ளத்தூர் பழ. பழனியப்பன் | 'விபுலானந்தர் விருது' கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் | 'நுழைபுலம்' ஆய்வு விருது பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் | 'மகரந்தச் சிறகு' விருது கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன் | 'ஏற்றமிகு இளைஞர்' விருது எழுத்தாளர் தீபச்செல்வன்

கேடயம், பொன்னாடை, ரூபா இருபதாயிரம் பொற்கிழி ஆகியவற்றுடன் கூடியதாக இவ்விருதுகள் முதல்நாள் விழாவில் வழங்கப்படவுள்ளன.

இளையோர் ஊக்கு விப்புப் போட்டிகளுக்கான பரிசளிப்பு அமரர் துரை. விஸ்வநாதன், அமரர் பொன். பாலசுந்தரம், அமரர் இலக்கிய வித்தகர் இ. நமசிவாய தேசிகர் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட பேச்சு, கவிதை, திருக்குறள் மனனப் போட்டிகளிலும், இலக்கியப் புரவலர் ஹாசிம் உமரின் ஆதரவுடன் இவ்வாண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமிய இலக்கியப் பேச்சுப் போட்டியிலும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் பரிசில்களும் இரண்டாம் நாள் விழாவில் வழங்கப்படவுள்ளன.

இவ்வாண்டுக் கம்பன்விழாவில் எழிலுரை, நாட்டிய அரங்கம், சுழலும் சொற்போர், வழக்காடு மன்றம், கவிநய அரங்கம், பட்டிமண்டபம், சிந்தனை அரங்கம், கவியரங்கம், இலக்கிய ஆணைக்குழு, கருத்தரங்கம், நாடக அரங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இந்திய அறிஞர்கள்



விழாவில் கலந்துகொள்ளும் பிறநாட்டு, நம்நாட்டு அறிஞர்கள் இவ்வாண்டு தமிழ்நாட்டு பிரபல தொழிலதிபர் பத்மஸ்ரீ டாக்டர் நல்லி குப்புசாமி செட்டி விருந் தினராய்க் கலந்து கொள்வதோடு, விழா நிகழ்ச்சிகளில் தமிழ்நாட்டின் சிறந்த அறிஞர்களான திருமதி பாரதி பாஸ்கர், திருமதி கே. சுமதி, டாக்டர் பிரியா இராமச் சந்திரன், புலவர் இரெ. சண்முகவடி வேல், புலவர் மா. இராமலிங்கம், பிரபல திரைப்பட பாடலாசிரியர் கலை மாமணி கவிஞர் பிறைசூடன், திரைப் பட இயக்குநர் பாரதி கிருஷ்ண குமார், மதுரை எம். சண்முகம், முனைவர் இரா. மாது, பேராசிரியர் ரி. ரெங்க ராஜா ஆகியோரும், அவுஸ்திரேலியாவிலிருந்து பேச்சாளர்களான தி.திரு நந்தகுமார், க. குமாரதாசன், ஜெ.ஜெய ராம் ஆகியோரும், நம்நாட்டைச் சார்ந்த பிரபல பேராசிரியர்கள், அறிஞர்கள், நிர்வாகிகள், சமுதாயப் பிரமுகர்கள், வர்த்தகப் பெருமக்கள் ஆகியோரும் இவ்வாண்டு விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

புத்தகக்கண்காட்சி விழா நடைபெறும் ஐந்து நாட்களிலும் மண்டப வாயிலில் அகில இலங்கைக் கம்பன்கழகம் மற்றும் பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகியன புத்தகக் கண்காட்சி ஒன்றினை நடத்தவுள்ளன. இக் கண்காட்சியில் சிறப்புத் தள்ளுபடியில் புத்தகங்கள் மற்றும் கழக விழாக்களின் இறுவெட்டுக்கள் விற்பனை செய்யப் படும்.

கம்பன் விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் நேர ஒழுங்கின்படி நடாத்தப்படவுள்ளதால் இரசிகர்கள் குறித்த நேரத்தில் வருகை தந்து விழாவைச்சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கழக முகவரிப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டோருக்கு அழைப்பிதழ்கள் நேரடியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. மற்றைய தமிழ் இரசிகர்களுக்கு ஊடகங்கள் மூலம் விழாவிற்கான அழைப்பினை கம்பன் கழகம் மனமகிழ்வுடன் விடுக்கிறது.

## பிறநாட்டுப் பிரமுகர்கள்



மாண்புமிகு வி. பி. சிவக்கொழுந்து, சபாநாயகர், புதுச்சேரி சட்டசபை | கௌரவ. இல. கணேசன், முன்னாள் இந்திய பாராளுமன்ற உறுப்பினர் | பத்மஸ்ரீ டாக்டர் நல்லி குப்புசாமி செட்டி, தொழிலதிபர், தமிழ்நாடு | கௌரவ. டத்தோஸ்ரீ எம். சரவணன் பா.உ., முன்னாள் அமைச்சர், மலேசியா

# குப்பைமேடு தீப்பற்றியதால் புகை மண்டலம் ஒரு பாடசாலை, இரு முன்பள்ளிகள் மூடல்

(கதிர்காமம்)

கதிர்காமம் பகுதியில் குப்பை மேட்டில் ஏற்பட்ட திடீர் தீ மற்றும் புகை மண்டலம் காரணமாக அப்பகுதியில் இருந்த தெடகமுவ பாடசாலை மற்றும் இரண்டு முன்பள்ளி மூடப்பட்டன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

ஊவா மாகாண கல்வி அமைச்சின் அறிவுறுத்தலிற்கு அமைய மாணவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பாடசாலையை மூடியதாக பொலிஸார் தெரிவித்தனர். குப்பை மேட்டில் ஏற்பட்ட புகை காரணமாக அங்கு பரிசோதனைக்காக சென்ற அதிகாரிகளும் மயக்கமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக கொட்டப்பட்டிருந்த குப்பைகளுக்கு மூட்டப்பட்ட தீயினால் நேற்று முன்தினம் காலையில் அப் பிரதேசத்தில் அதிகளவிலான புகை மண்டலம் சூழ்ந்ததுடன் துர்நாற்றமும் வீசியது.

இதனைத் தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளர் புத்திக கருணாரத்னவுக்கு தகவல் அளித்ததையடுத்து அவர் பாடசாலைகளை மூடுமாறு அறிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



# டெங்குக் காய்ச்சலால் மூவாயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

இவ்வருடம் தொடங்கிய இது வரையான காலப்பகுதியில் மூவாயிரத்திற்கும் அதிகமானோர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அத்தோடு கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் மிகக் குறைந்தளவானோரே டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் அருண ஜெயசேகர தெரிவித்தார்.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்திலேயே டெங்கு நுளம்பு பரவல் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை டெங்கு ஒழிப்புப் பணியகத்தின் கள ஆய்வு நடவடிக்கைகள் நாளாந்தம் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மரக்கறிகளின் விலை குறைப்பு

# நன்மைகள் நாட்டு மக்களுக்கு சென்றடைகிறதா? ஆராயுமாறு அதிகாரசபைக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்பட்ட மரக்கறிகளின் விலைகள் திடீரென குறைக்கப்பட்டன.

இதன் நன்மைகள் நாட்டு மக்களுக்கு சென்றடைகின்றதா? என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்த்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நுகர்வோர் அதிகார சபைக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து புறக்கோட்டை, மெனின் சந்தையின் மரக்கறி விலைகள் தொடர்பில் விசாரணையை ஆரம்பிக்க நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் ஷாந்த திஸாநாயக்க நடவடிக்கை எடுத்தார்.

கடந்த காலங்களில் பெய்த அடைமழை காரணமாக மரக்கறிகளின் விலைகள் பெருமளவில் அதிகரித்து காணப்பட்டன. எனினும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியின் பின்னர் மரக்கறி விலை மேலும் குறைவடையும் என மெனின் சந்தையின் வர்த்தக சங்கம் தெரிவித்தது.

யாழ். குடாநாட்டிலிருந்து மரக்கறி குறித்த சந்தைக்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து மரக்கறி விலை குறைவடைந்ததாக தெரியவந்தது.

அதற்கமைய போஞ்சி ஒரு கிலோ கிராம் 220 ரூபாவுக்கும் கரட் ஒரு கிலோ கிராம் 300 ரூபாவுக்கும் லீக்ஸ் ஒரு கிலோ கிராம் 220 ரூபாவுக்கும் பீட்ரூட் ஒரு கிலோ கிராம் 150 ரூபாவுக்கும் தற்போது விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில் கண்டி, தம்புள்ளை, மீகொட, நாரஹேன்பிட்டி, தம்புத்தேகம மற்றும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறியின் விலை குறைவடைந்ததாக தெரிய வருகிறது. (இ-7)

# பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கல்





(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தன்று 150 பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 128,000 பெறுமதியிலான புத்தகப் பைகள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் அன் பளிப்பாக வழங்கப்பட்டன.

வட்டு.மத்திய கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, அராலி வள்ளியம்மை வித்தியாலயம், யாழ்ப்பாணக் கல்லூரி, அராலி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, வட்டு கஜமுகன் முன்பள்ளி. சங்கரத்தை மாதர் சங்க முன்பள்ளி மற்றும் சங்கானை அறிவகம் முன்பள்ளி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த கல்வியில் ஆர்வமுள்ள சுமார் 150 மாணவர்களுக்கு புதிய கல்வியா ண்டில் அவர்களின் கற்றல் நடவடிக்கையினை ஊக்குவிக்கும் முகமாகவே வட்டு. இந்து வாலிபர் சங்க தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற பொங்கல் தின விழாவின் போது ரூபா ஒரு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் பெறுமதியில் புதிய புத்தகப் பைகள் மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ஜ)

# ஆயுர்வேத மருத்துவப் பிரிவு நிறுத்தம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் நீண்ட காலமாக இயங்கி வந்த ஆயுர்வேத மருத்துவப் பிரிவு இவ் வருட ஆரம்பத்திலிருந்து நிறுத்தப்படடது.

இதன் காரணமாக இது வரை காலமும் சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று வந்த பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை நடைபெறுகின்ற குறித்த ஆயுர்வேத மருத்துவ அலகின் ஊடாக தொடர்ச்சியாக நூற்றுக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று வந்த நிலையில் திடீரென குறித்த அலகு நிறுத்தப்பட்டது.

முன் அறிவித்தல்கள் எதுவுமின்றி குறித்த மருத்துவ அலகு நிறுத்தப்பட்டமையால் வியாழக்கிழமைகளில் பெருமளவானோர் ஆயுர்வேத மருத்துவ அலகின் உதவியை நாடி சாவகச்சேரி நகரசபைக்கு வந்து பின்னர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இதனால் பொதுமக்களின் நலன்கருதி சாவகச்சேரி நகர சபையினர் மீளவும் குறித்த மருத்துவ அலகினை நகரசபையில் இயங்க வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக நகரச பையின் மாதாந்த சபை அமர்விலும் விவாதிக்கப்பட்டு உடனடியாக மருத்துவ அலகினை மீள ஆரம்பிக்கக்கோரி சுதேச மருத்துவ திணைக்களப் பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கவும் சபையில் தீர்மானிக்கப்பட்டது.


சாவகச்சேரி நகரசபையில் இயங்கிய ஆயுர்வேத மருத்துவ அலகு நிறுத்தப்பட்டமையால் அங்கு தொடர்ச்சியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று வந்த நோயாளர்கள் தற்போது அதிக தூரம் பயணித்து கைதடி அல்லது கொடிகாம ஆயுர்வேத வைத்தியசாலைகளை நாடிச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)



யாழ். வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும், மலர் வெளியீடும் கடந்த 16 ஆம் திகதி கல்லூரியில் இடம்பெற்றது. இதில் வயவன்-18 நூல் சம்பிரதாயபூர்வமாக வெளியிடப்பட்டது. கல்வி மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் கல்லூரியில் முதல்நிலையில் விளங்கிய மாணவன், மாணவி "வயவன் நட்சத்திரம்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# கடற்றொழில் சார்ந்த முன்மொழிவுகள் நாட்டினதும் எதிர்கால சந்ததியினரதும் நலன் கருதியே வகுக்கப்பட்டுள்ளன

## அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இந்தச் சபையிலே சமர்ப்பிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், முன்மொழிவுகள் யாவும் இந்த நாட்டினதும் நாட்டு மக்களினதும் குறிப்பாக எமது எதிர்கால சந்ததியினரதும் நலன் கருதியே வகுக்கப்பட்டன என்பதை நான் மீண்டும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதன் முதலாவது ஒழுங்கு விதிகள் முன்மொழிவானது எமது நாட்டின் நீர்ப் பரப்புக்களுக்குள் நீர் வாழ் உயிரினங்களையும் நீரக வள மூலங்களையும் பாதுகாக்கின்ற ஒழுங்கு விதிகளாகும்.

எமது நாட்டிலே காணப்படுகின்ற நீரக வள மூலங்களைக் கொண்ட நிலைகளில் நீர் வாழ் உயிரினங்களுக்கும் அதே நேரம், நீரக வள மூலங்களுக்கும் பாதிப்பினை உண்டு பண்ணக் கூடிய எவ்விதமான கழிவுப் பொருட்களையும், எறிவது - கொட்டுவது இதன் மூலமாகத் தடை செய்யப்படுகின்றது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அண்மையிலே நான் பல்வேறு பகுதிகளுக்கு மேற்கொண்டிருந்த கள விஜயங்களின்போது நீரக வள மூலப் பகுதிகள் பலவும் கழிவுப் பொருட்களால் மிக அதிகமாகவே பாதிக்கப்பட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. அவற்றை உடனடியாக சுத்தம் செய்யுமாறு அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு பணிப்புரைகளை விடுத்தாலும் அத்தகைய கழிவுப் பொருட்களை நீர் நிலைகளில் எறிகின்றவர்களிடையே - கொட்டுகின்றவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படாத வரையில் கழிவுப் பொருட்களின் தாக்கத்திலிருந்து நீர் நிலைகளைப் பாதுகாத்துக் கொள்வதென்பது கடினமான காரியமாகும்.

அந்த வகையில், இதற்கான விழிப்புணர்வு ஏற்பாடுகளை தற்போது நாம் பரவலாக முன்னெடுத்து வருவதுடன், நீரக வள மூலப்பகுதிகளைத் துப்புரவு செய்கின்ற நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளோம்.

அத்துடன், கரையோரங்களில் காணப்படுகின்ற கண்டல் தாவரங்களை ஏதேனும் வகையில் அழிப்பதற்கான தடையினையும் இந்த ஒழுங்குவிதிகள் முன்மொழிவு கொண்டுள்ளது.

தற்போது உலகிலே பல்வேறு தாவர இனங்கள் அழிந்து வருவதாகவும் எமது நாட்டிலும் பல்வேறு தாவரங்கள் அழிவை எதிர்நோக்கி வருவதாகவும் ஆய்வுகள் கூறுகின்ற நிலையில், அதில் முக்கியமானதாக இந்த கண்டல் தாவரம் காணப்படுகின்றது.

குறிப்பாக மீன் மற்றும் இறால் பெருக்கத்திற்கு, கால்நடை உணவுக்கு, கடற்கரையின் பாதுகாப்பிற்கு, கரியமில வாயுவின் அளவை குறைப்பதற்கு, கடல் வளங்களைப் பேணுவதற்கு, கடல் நீரைத் தூய்மையாக்குவதற்கு, கடல் வாழ் அங்கிகளின் வாழ்விடமாக, பசளை உற்பத்திக்கு, பறவைகளுக்கு புகலிடமாக, மண் அரிப்பைத் தடுப்பதற்கு என பல்வேறு நன்மைகளை வழங்குகின்ற கண்டல் தாவரமானது, எமது நாட்டிலே தற்போது சுமார் 8000 ஹெக்டேயர் பரப்பளவில் இருப்பதாகக் கூறப்பட்டாலும் அது அழிவின் விளிம்பை நோக்கிச் செல்வதால் உடனடியாக கண்டல் தாவர இன பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவையும் கண்டல் தாவரங்களை வளர்க்கும் தேவையும் அத்தியாவசியமாக உள்ளது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 28 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய ஒழுங்கு விதியாகும்.

இது 'ஸ்பியர்' எனப்படுகின்ற ஈட்டி பொருத்தப்பட்ட அதாவது கூர்முனை கொண்ட துப்பாக்கி கொண்டு, அல்லது கூர்மையான ஆயுதத்தைக் கையில் கொண்டு, கடற்றொழிலில் ஈடுபடுவதைத் தடை செய்கின்றது.

இந்த முறைமையானது இன்று உலகின் பல்வேறு நாடுகளிலே தடை செய்யப்பட்டு வருகின்ற முறையாகும். கடல் வளத்தை வெகுவாக அழிக்கின்ற இந்த முறைமையினை சூழலியலாளர்கள், அலங்கார மீன் ஆர்வலர்கள், வனஜீவிகள் ஆர்வலர்கள், சுற்றுலாப் பயணிகள் போன்ற பலரும் எதிர்த்து வருகின்றனர். மேற்படி தொழில் முறைமை காரணமாக அலங்கார மீனினங்கள் அழிவடைந்து வருகின்ற நிலைமை மிக அதிக மாகும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இலங்கையின் உள்ளோ, இலங்கையின் கடல் நீரகவள மூலப் பகுதிகளிலோ 'தம்புவா' எனப்படுகின்ற (Cephalopholis sonnerati) ஒரு வகை விளமீன்களைப் பிடிப்பதானது தடை செய்யப்படுகின்றது.

சுமார் 20 மீற்றர் ஆழ்கடலில் கற்பாறைகளை அண்டியதாக வாழுகின்ற, சூழலுக்கு மிகுந்த நன்மை பயக்கின்ற இந்த அரிய வகை மீனினமும் தற்போது அழிவை நோக்கி வருவதாகவே ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

12 வருட ஆயுட் காலத்தைக் கொண்ட இந்த மீனினமானது 5 வருடத்தில் முட்டை இட ஆரம்பிக்கின்றது. எனினும், கடற்றொழிலில் ஈடுபடுகின்றவர்கள் இந்த வகை மீனினத்தையும் குறை வயதில் பிடித்து வருவதாலும், அழித்து வருவதாலும் இன்று அழிவு நிலை நோக்கியதாக இந்த மீனினம் இருப்பதால், இவற்றின் மூலமான உற்பத்தியான சிவப்பு இறால் எனப்படும் கடல் இறால் இனமும் அழிவுக்கு உட்பட்டே வருகின்றது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எமது நாட்டின் கடற்றொழில் துறையை மேம்படுத்தும் பணியில் உங்கள் அனைவரதும் பங்களிப்புகள் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைக்கின்றேன் என கடற்றொழில் மற்றும் நீரியல்வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சின் 9 ஒழுங்குவிதிகள். தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)





சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகக் கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் யு.என்.எச்.சி. ஆர். இணைப்பாளர் வே. பிரபாகரன் கலந்து கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார். (படங்கள்: ஈச்சமோட்டை செய்தியாளர்)

# விருது மற்றும் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இவ் வருடமும் விருது மற்றும் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கலைஞர்கள் விண்ணப்பப் படிவங்களை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பெற்று கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

01.அரச இலக்கிய விருது வழங்கல் விழா-2019 (முடிவுத் திகதி :-25.02.2020)

02. எழுத்தாளர் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் நூல் கொள்வனவு செய்தல்-2020 (முடிவுத் திகதி :- 15.02.2020)

03.தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி-2020 (முடிவுத் திகதி :-31.05.2020) என பிரதேசசெயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரி, நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம், காங்கேசன்துறை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடேஸ்வரக் கல்லூரி மைதானத்தில் அதிபர்.கு.விமலன் தலைமையில் நடைபெறும்.

இதில், பிரதம விருந்தினராக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை விளையாட்டு மருத்துவ அதிகாரி வைத்தியர் ப.சுரேஷ்மோகன், (பழைய மாணவர்), சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் வை. சுரேஸ் (பழைய மாணவர்) ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# 40 மில்லியன் ரூபாய் வரையில் செலுத்தப்படாத பற்றுச் சீட்டுக்கள்

## ராஜித மீது பவித்ரா குற்றச்சாட்டு



(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன 40 மில்லியன் ரூபாய் வரையில் செலுத்தப்படாத பற்றுச்சீட்டுக்களை சுகாதார அமைச்சில் வைத்து விட்டுச் சென்றுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார்.

பிரதமரின் ஆலோசனையின் பிரகாரம் இந்த மோசடி தொடர்பில் விசாரணை செய்ய விசேட குழுவொன்று நியமிக்கப்படும் என்பதுடன், எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பிலான பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

மருந்து பற்றாக்குறை ஏற்படாது அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கும். என்றாலும் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன 40 மில்லியன் செலுத்தப்படாத பற்றுச்சீட்டுக்களை அமைச்சில் வைத்து விட்டுச் சென்றுள்ளார். இந்த விடயங்கள் தொடர்பில் எமது அரசாங்கம் வெளிப்படுத்தியதால் திறைசேரியில் 10 மில்லியன் நிதியை சுகாதார அமைச்சுக்கு பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. 40 மில்லியன் செலுத்தப்படாத நிதியை செலுத்துவதற்காக இவ்வாரம் பத்திர மொன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளோம்.

இதேவேளை இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழுவொன்றும் நியமிக்கப்படும். பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம் இக் குழு நியமிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தால் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணி முதல் இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-134)

# இரத்ததானம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மனிதவள முகாமைத்துவத் துறை மூன்றாம் வருட மாணவர் விரிவுரையாளர்களுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் இன்று வியாழக் கிழமை பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் காலை 9 மணி முதல் இடம்பெறும். (இ-18)

# அரச பாடசாலைகளில் ஆங்கிலமொழி போதனா மொழியாக்கப்பட வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் யாப்பா வலியுறுத்து

(வெலிகம)

**அரசாங்க பாடசாலைகளில் ஆங்கில மொழியை போதனா மொழியாகக் கற்பிக்க வேண்டுமென இராஜாங்க அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார். இதனால் சகல மதங்களையும் ஆங்கில மொழியிலே கற்பதற்கான வாய்ப்பு கிடைக்குமென்றும் அவர் தெரிவித்தார்.**



வெலிகம, முஸ்லிம் ஆரம்பப் பாடசாலையில் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்க்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலைகளில் இன்று சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. எனினும் ஆங்கில மொழியே போதனா மொழியாக அமைவது சிறந்ததாகும். இதன்மூலம் எல்லா மாணவர்களுக்கும் எந்தவொரு பாடசாலைக்கும் சென்று கல்வி கற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும். எமது நாட்டில் இனங்களிடையே நிலவும் வேறுபாடுகளை இல்லாதொழிக்கவும் இது வாய்ப்பாக அமையும். ஒரே பாடசாலையில் பல்வேறு இனத்தவர்கள் கல்வி கற்கக் கூடிய சந்தர்ப்பமும் இதனால் உருவாகும். மாணவர்களிடையே ஒற்றுமை, சகோதரத்துவம் என்பன உருவாகவும் இந்தக்கல்வி வழிகோலும். எந்த இனத்தவருக்கும் பாதிப்பு ஏற்பட இடமளிக்காது சகல இன மக்களையும் ஒன்றாக மதித்து ஒரே மாதிரியான சேவைகளைப் பெற்றுக் கொடுக்கவே அரசாங்கம் விரும்புகிறது.

கடந்த காலங்களில் எமது அரசாங்கத்தைப் பற்றி பொய்யான கருத்துக்கள் பிரசாரம் செய்யப்பட்டன. எதிர்காலத்திலும் இவ்வாறான கருத்துக்களை பரப்ப சிலர் முயற்சிக்கலாம். இதனை எவரும் நம்பக்கூடாது. இப்பாடசாலையின் குறைபாடுகள் பற்றி பாடசாலை அதிபர் என்னிடம் சுட்டிக்காட்டினார். கூட்ட மண்டபத்துடன் வகுப்பறைகளைக் கொண்ட மூன்றுமாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இப்பாடசாலையின் முன்னேற்றத்துக்கு தென் மாகாண முதலமைச்சராக இருந்தகாலம் தொட்டு இன்று வரை உதவி வருகின்றேன். எதிர்காலத்திலும் இப் பாடசாலை முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தின் மூலமும் மாகாண சபை மூலமும் உதவுவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிள்ளையான் மீதான வழக்கு ஒத்திவைப்பு



(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்திரகாந்தன் மீதான வழக்கு நேற்றுக் காலை மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.என்.அப்துல்லா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது பெப்ரவரி 25 ஆம் திகதி வரை வழக்கினை ஒத்திவைத்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி இஸ்ஸடீன் இடமாற்றம் பெற்றுச் சென்ற நிலையில் புதிய மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள நீதிபதி அப்துல்லா முன்னிலையில் நேற்றுக் காலை குறித்த வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டது.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவ சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்த போது தேவாலயத்திற்குள்ளேயே வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1954


### றுக்குமணி

பொறுமையாகக் காத்திரு...



கடைசி நிமிடத்தில் இங்கு மாறிய ஆட்டங்கள் நிறைய உண்டு...

### தனன்சயன்



இருந்தால்
உறவு
பிரிந்தால்
நினைவு
அவ்வளவுதான்
வாழ்க்கை

### தவராணி

பணம் பத்தும் செய்யும்...



பாசம் வைச்சா அது நம்மளை வைச்சுச் செய்யும்...

### ராசன்

ஒரு தாய் உன்னைப் பெறும் போது அழுதிருக்கலாம்...!



ஒருபோதும் உன்னைப் பெற்றதற்காக அழக்கூடாது...!

### நிலா

பணம் வைத்திருப்பவன் எல்லாம் பணக்காரன் கிடையாது...



படுத்த உடனே தூங்குறவன் தான் உண்மையான பணக்காரன்...

### அனித்தா

நல்லா கவனித்துப் பார்... நீ பாவம் பார்த்த யாரோ



ஒருவர் தான் சமயம் பார்த்து உன்னை "பதம்" பார்த்து இருப்பார்கள்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சாய்ந்தமருது தற்கொலை தாக்குதல் சம்பவம்; புலஸ்தினியின் மரபணு பொருந்தவில்லையாம்!

## நீதிமன்றில் விசேட குற்றவியல் பிரிவு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து, சாய்ந்தமருதில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சாரா எனப்படும் புலஸ்தினி மகேந்திரனின் மரபணுக்கள், அவரின் குடும்ப உறவுகளின் மரபணுவுடன் பொருந்தவில்லை என்று விசேட குற்றவியல் பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

கல்முனை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசாரணையின்போதே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைதான 12 பேர் கல்முனை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இந்த வழக்கு விசாரணை இரண்டு கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது, 6 சந்தேக நபர்களுக்கான விசாரணையின்போது மன்றில் தோன்றிய விசேட குற்றவியல் பிரிவின் அதிகாரி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி சாய்ந்தமருதில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் மரபணு பரிசோதனை தொடர்பாக நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

விசேடமாக, இந்தத் தாக்குதலின்போது மரணமடைந்ததாக தெரிவிக்கப்படும் சாரா என்றழைக்கப்படும் புலஸ்தினி மகேந்திரன் என்ற பெண்ணின் மரபணு பரிசோதனை மாத்திரம் எந்தவொரு மரபணு பரிசோதனையுடனும் பொருந்தவில்லை என்று அவர் மன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து சாரா என்றழைக்கப்படும் புலஸ்தினி மகேந்திரனின் மரபணு பரிசோதனை அறிக்கையை மீண்டும் ஆராய்ந்து நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கல்முனை நீதவான் உத்தர விட்டார்.

மேலும், இச் சம்பவத்தில் மரணமடைந்தவர்களின் மரபணு பரிசோதனையை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி மீண்டும் மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஜ)

# கோட்டாவின் ஆட்சியில் சு.கவின் நிலை மிகவும் கவலை அளிக்கிறது- மரிக்கார்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைமை மிகவும் கவலை அழிப்பதாகத் தெரிவித்த கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம். மரிக்கார் நல்லாட்சி அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சுதந்திரக் கட்சி செய்த அநீதிக்கான சாபமாகவே இதனைக் கருத முடிகிறது எனவும் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தாவது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் நிலை கவலையளிக்கிறது. ஏனெனில் நல்லாட்சி அரசாங்கத்தில் அவர்கள் இணைந்திருந்த போது அனைத்து சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

எமது ஆதரவாளர்களுக்கு கிடைக்கவேண்டிய சலுகைகள் அனைத்தும் சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களுக்கே கிடைத்தது. தமக்கு ஏற்ற வகையில் சுதந்திரமாக செயற்பட்டனர்.

பின்னர் ஐ.தே.கவை விட்டு விலகிச் சென்றனர்.

தற்போது தம்மை மொட்டு கட்சியினர் கவனத்திற் கொள்வதில்லை. தமது கருத்திற்கு மதிப்பளிக்கின்றார்கள் இல்லை என்று சுதந்திரக் கட்சியினர் புலம்புகின்றனர். ஐ.தே.கவிற்கு அவர்கள் செய்த அநீதிக்காக கடவுள் அவர்களுக்கு கொடுத்துள்ள தண்டனையே இத்தகைய நிலைமையாகும்.

அவர்களுடைய கட்சியின் சார்பில் மனுத்தாக்கல் செய்வதற்கான வாய்ப்புக்களும் இழக்கப்பட்டுள்ளன. அப்பாவி ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு செய்த அநீதியான செயற்பாடுகளின் சாபமே அவர்களுக்கு இத்தகைய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் ஐ.தே.க.ஆதரவாளர்களுக்கு எந்தத் தொழில்வாய்ப்பும் வழங்கப்படவில்லை. மாறாக சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களுக்கே வழங்கப்பட்டன.


ஐ.தே.க.ஆதரவாளர்கள் வாக்களித்து நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கினர். ஆயினும் அவர்களுக்கு அனைத்து துறையிலும் சலுகைகள் மறுக்கப்பட்டன.

இந்நிலையில் தற்போது மொட்டுக்கட்சியில் இணைந்து கொண்டு எமக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மனநிலையில் மொட்டுக்கட்சியினர் இல்லை. மொட்டுக்கட்சியினரிடத்தில் இத்தகைய நாடகங்கள் பலிக்காது. இதனை நினைவிற் கொள்ள வேண்டும் என சுதந்திரக்கட்சியினரிடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# அம்பாறையில் பொலிஸார் திடீர் சோதனை





(அம்பாறை)

அம்பாறையில் நேற்று முன்தினம் காலை முதல் பிற்பகல் வரை மாவட்ட விசேட போக்குவரத்து பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்த திடீர் சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை புறநகரப்பகுதி, கல்முனை நகரப்பகுதி, நற்பிட்டிமுனை பிரதான சந்தி, தாளவட்டுவான் சந்தி, பாண்டிருப்பு, சவளக்கடை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

இத் திடீர் சோதனையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, தொடர்பில் கண்காணிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டு வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகள் பொலிஸாரால் வழங்கப்பட்டன. (ஜ)

# செய்தித்துளிகள்

## வாழ்வகம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்




(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினரால் யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வாழ்வகம்- விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்திலுள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (இ-7)

## குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட முதியவர் அடையாளம் காணப்பட்டார்

(சாவகச்சேரி)

வரணி-இடைக்குறிச்சிப் பகுதியிலுள்ள குளமொன்றிலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் மீட்கப்பட்டு அடையாளம் காணப்படாத நிலையில் இருந்த முதியவரது சடலம் நேற்றுப் புதன்கிழமை அவரது உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த இடைக்குறிச்சி வரணியைச் சேர்ந்த 64 வயது வே.இராசதுரை என்பவரது சடலமே அவரது உறவினர்களால் அடையாளம் காட்டி பெற்றுச் செல்லப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக கிணறு உள்ளிட்ட நீர் நிலைகளில் தவறியும் தற்கொலை செய்யும் நோக்கிலும் விழுந்து உயிரிழக்கும் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இணுவில் கற்பகப் பிள்ளையார் கோவிலடியிலுள்ள யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் தெ.சுகிர்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 90 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 380 | 300 | 280 | 300 |
| தக்காளி | 350 | 260 | 350 | 140 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 90 | 80 |
| கோவா | 170 | 180 | 160 | 120 | 200 |
| கரட் | 350 | 380 | 400 | 350 | 500 |
| பூசணி | 100 | 80 | 60 | 50 | 100 |
| புடோல் | 120 | 120 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 300-400 | 280 | 500 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 120 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 170 | 180 | 120 | 90 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 180 | 140 | 150 | 160 |
| லீக்ஸ் | 300 | 320 | 350 | 400 | 500 |
| பீற்றூட் | 100 | 160 | 120 | 200 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 280 | 200 | 280 |
| முருங்கைக்காய் | 800 | 1600 | 1000 | 500 | 1000 |
| போஞ்சி | 160 | 160 | 220 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | – | 100 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 30-40 | 30 | 40 |
| தேசிக்காய் | 50 | 30 | 50 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 35-50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 160 | 150 | 200 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 240 | 200 | 280 |
| முள்ளங்கி | 50 | 140 | 80 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | – | – | 120 | 120 |




# உண்மையைச் சொல்கிறேன்!




வெகு காலத்துக்கு முன் பழமுதிர்ச்சோலை என்ற நாட்டை மன்னன் பழவர்த்தன் ஆண்டு வந்தார். அவர் நீதி நெறி தவறாதவர், வாய்மை நிரம்பியவர், உண்மை பேசுபவர். தன்னைப் போலவே தன் குடிமக்களும் இருக்க வேண்டும் என்று விரும்புபவர். அவருக்கு திருமணமாகி நீண்ட நாட்களாகியும் குழந்தைகள் இல்லை. தனக்கு பின் தன் நாட்டை ஆளத் தக்க வாரிசுகள் இல்லாததால், தன் நாட்டு மக்களில் நீதியும் நேர்மையும் தவறாத உண்மையான ஒரு இளைஞனைக் கண்டுபிடித்து, அவனை மன்னனாக்க வேண்டும் என்று விரும்பினார். இதற்காக யாருடைய ஆலோசனையையும் நாடவில்லை. அவரே மிகச் சிறந்த அறிவாளியாக இருந்தபடியினால், பல நாட்கள் யோசித்து ஒரு முடிவு செய்தார். நாட்டில் உள்ள வீரம் மிக்க இளைஞர்களை அழைத்து வில் போட்டி நடத்தினார். அதில் வென்றவர்களை அழைத்து, வாள் போட்டி நடத்தி பரிசீலனை செய்தார். அதன்பின், வாய்மொழிக் கேள்விகள், சமயோசிதமான கேள்விகள் என்று இராணுவத்துக்கு ஆள் எடுப்பதைப் போல அவர்களைச் சோதித்தார். கடைசியாக, ப்த்து இளைஞர்கள் தேறினர். அவர்களை மன்னர் அழைத்து, அவர்கள் அனைவரிடமும் தனித்தனியாக ஒரு செடியின் விதையைக் கொடுத்தார். "இந்த விதையை ஒரு தொட்டியில் போட்டு வளர்த்து, கவனமுடன் கண்காணித்து, ஆறுமாதம் சென்ற பிறகு, வளர்த்த செடியுடன் என் முன் வர வேண்டும். இதுதான் நான் உங்களுக்கு வைக்கக்கூடிய இறுதிக்கட்டச் சோதனை" என்றார். பத்துப் பேரும் அதனை வாங்கிக் கொண்டனர். அதில், சாந்தனு என்ற வாலிபன் ஒருவனும் இருந்தான். எல்லாரும் மன்னர் சொன்னபடி அந்த விதையைத் தொட்டியில் போட்டுச் சிறந்த உரங்களையும் எருவையும் இட்டு வளர்க்க ஆரம்பித்தனர். சாந்தனுவும் அப்படியே செய்தான். ஆனால், என்ன காரணத்தினாலோ அவனது விதை முளைத்துச் செடியாகவில்லை. மற்றவர்களின் வீட்டுக்குப்போய் அவர்கள் செடி வளர்ந்திருக்கிறதா? என்று அவன் கண்காணித்தான். என்ன ஆச்சரியம்! மற்றவர்களின் விதையானது நன்றாக முளைவிட்டு, இலை விட்டுச் செழித்து வளர ஆரம்பித்திருந்தது. வீட்டுக்கு வந்த சாந்தனு தன்னிடமுள்ள விதை செடியாக எல்லாவிதமான முயற்சிகளையும் செய்தான். ஆனால், என்ன காரணத்தினாலோ, அந்த விதை முளைக்கவில்லை.

"முளைக்காத விதையை ஒரு வேளை மன்னர் தனக்குத் தந்திருப்பாரோ?" என்று எண்ணினான். மறுகணமே, "ச்சே... என்ன மோசமான எண்ணம்... எல்லாருக்கும் கொடுத்தது போலதான் எனக்கும் கொடுத்தார். என் விதை முளைக்கவில்லை என்றால், அது என் துரதிர்ஷ்டம். மற்றவர்கள் விதை எல்லாமே முளைத்திருப்பது அவர்களுடைய அதிர்ஷ்டம். "ஆறு மாதம் வரை பொறுத்திருந்து பார்ப்போம்... அப்போதும் விதை முளைக்காவிட்டால், "அரசே, என் விதை மட்டும் முளைவிக்கவில்லை!" என்று உண்மையைக் கூறி விடுவோம். அதற்காக மன்னர், நான் சரியாக செடியைப் பராமரிக்கவில்லை என்று கருதி எனக்குத் தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வோம்!" என்று கருதினான். ஆறு மாதம் சென்றன. வெற்றிப் பெருமிதத்துடன் மீதியுள்ள ஒன்பது பேரும் தங்கள் கையில் தொட்டியை ஏந்தி வந்தனர். அதில் இரண்டடி நீளத்துக்குச் செடி வளர்ந்திருந்தது. அது ஆரோக்கியமாக இருந்தது. மன்னர் எல்லாருடைய தொட்டிகளையும் பார்த்துக் கொண்டே வந்தார். அவர் இதழ்களுக்கிடையில் புன்முறுவல் ஒன்று நெளிந்தது. சாந்தனுவிடம் வந்ததும் அவன் காலித் தொட்டியுடன் நிற்பதைக் கண்டவுடன் மன்னர் முகம் மாறியது. நடுநடுங்கிப் போனான் சாந்தனு. அவனையே உற்றுப் பார்த்த மன்னர் அவனிடம் அதிகாரமாகக் கேட்டார், "உன்னுடைய பெயர் என்ன?" என் பெயர் சாந்தனு அரசே! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். நான் ஆறு மாத காலமாக இந்த விதையைச் செடியாக்க எவ்வளவோ பாடுபட்டேன். ஆனால், உண்மையிலேயே என்னால் அதைச் செடியாக்க முடியவில்லை. என்னை நம்புங்கள் அரசே!" என்று மண்டியிட்டு கதறினான். மன்னர் கீழே குனிந்து அவனைத் தூக்கி நிறுத்தித் தன் மார்போடு அணைத்துக் கொண்டார். "எதிர்கால மன்னனைத் தேர்ந்தெடுக்கவே இப்போட்டிகளை வைத்தேன். அதில் வென்றவனாக இந்த சாந்தனுவை அறிவிக்கிறேன். இவன்தான் எதிர்கால மன்னன்!" என்றார். இதைக் கேட்ட அனைவரும் வியப்படைந்தனர்.

அமைச்சர் எழுந்து, "அரசே, தாங்கள் சொன்னபடி ஒரு செடி கூட வளர்க்கத் தெரியாத இந்த வாலிபனா எதிர்கால மன்னன்? மன்னருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து செடியைக் கண்ணும் கருத்துமாகப் பராமரிக்காமல் சோம்பேறித்தனமாக இருந்துவிட்டு, வெறும் பூந்தொட்டியைக் காட்டிய இவனா இந்த நாட்டு மன்னன்?" என்று கேட்டார். "அமைச்சரே, நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள். இவன் அவனால் ஆகக் கூடிய முயற்சிகளை எல்லாம் செய்து பார்த்தான் என்பதை நான் நம்புகிறேன். ஏன் தெரியுமா? நான் பத்து இளைஞர்களுக்கும் செடி வளர்க்கக்கொடுத்த பத்து விதைகளும் நன்றாக வேகவைக்கப்பட்டு உலர்த்தப்பட்ட விதைகள். "அதில் எந்தச் செடியும் முளைக்காது. என்னிடமிருந்து பரிசுகளோ, பதவியோ பெறுவதற்காக மற்ற இளைஞர்கள் வேகவைக்கப்பட்ட விதைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, அதற்குப் பதிலாக அதே போன்ற நல்ல விதைகளை வாங்கிப் பயிரிட்டுச் செடிகளாக்கிக் கொண்டு வந்திருக்கின்றனர். "ஆனால் சாந்தனு அப்படிச் செய்யவில்லை. அரச கட்டளையை ஏற்று ஆறு மாத காலம் போராடிப்பார்த்திருக்கிறான். விதை முளைக்கவில்லை என்றதும், அதை உள்ளபடியே என்னிடம்அறிவிக்கக் காலித் தொட்டியுடன் வந்தான். "உண்மையைச் சொல்லும்போது என்னால் அவனுக்குத் தண்டனை ஏற்பட்டால் கூட அதைத்தாங்கச் சித்தமாயிருந்திருக்கிறான் என்பதை அவன் செயல், பார்வை, பேச்சு, வார்த்தை, நடத்தை மூலம் அறிந்து கொண்டேன். "இப்படி நேர்மையாக நடந்து கொண்டதன் மூலமாக அவனால் நிச்சயம் நாடு செழிக்கும்" என்றுதான் அவனை மன்னனாக அறிவித்தேன். மன்னரின் அறிவுக் கூர்மையை எண்ணி அனைவரும் வியந்து பாராட்டினர். அங்கிருந்த செடி வளர்த்த ஏனைய இளைஞர்கள் அரசனிடம் மன்னிப்புக் கோரினர். அரசனும் அவர்களை மன்னித்தார்.

## விடை கண்டுபிடியுங்கள்




## பழமொழிகள்

- தஞ்சம் என்று வந்தவனை வஞ்சித்தல் ஆகாது.
- தடி எடுத்தவன் தண்டல்காரனா?
- தட்டிப்பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்.
- தணிந்த வில்லுத்தான் தைக்கும்.
- தண்ணீரையும் தாயையும் பழிக்காதே.
- தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும்.
- தந்தை எவ்வழி புதல்வன் அவ்வழி.
- தம்பி உடையான் படைக்கு அஞ்சான்.
- தருமம் தலைகாக்கும்.
- தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.
- தலை இருக்க வால் ஆடலாமா ?
- தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாணென்ன முழமென்ன?
- தலை எழுத்தை தந்திரத்தால் வெல்லலாமா?
- தவத்துக்கு ஒருவர் கல்விக்கு இருவர்.

உள்ளத்தில் ஒழுங்கு முற்றிலும் குறைந்திருப்பதால் நாம் புறத்திலும் எதையும் நிலைநாட்ட முடியாது.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கனவிலும் ஒற்றுமைப்படாத தமிழ் அரசியல் தரப்பு

எல்.கே.ஜி என்ற திரைப்படத்தை யாரேனும் பார்க்கத் தவறியிருந்தால் அந்தத் தவறை நிவர்த்தி செய்யுங்கள் என்று ஆலோசனை கூறுவேன்.

அந்தளவுக்கு எல்.கே.ஜி என்ற திரைப்படம் அரசியலின் அனைத்து திருகுதாளங்களையும் மிக நுட்பமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

ஆர்.ஜே.பாலாஜியின் நடிப்பு அற்புதம். கூடவே நாஞ்சில் சம்பத்தின் நடிபங்கு வியக்க வைக்கும்.

இது தவிர, ராம்ராஜ் பாண்டியன் என்ற பாத்திரமேற்று நடிக்கும் ரித்திஷ் கண்டியைச் சேர்ந்தவர்.

(மிக அண்மையில் அவர் மரணமடைந்து விட்டார் என்பது சோகமான செய்தி)

அவரின் நடிப்பு அரசியலின் தாற்பரியத்தை தங்கு தடையின்றி வெளிப்படுத்துகிறது.

லால்குடி கருப்பையா காந்தி என்ற விரிவாக்கமே எல்.கே.ஜி என்பதாக விளக்கம் தரப்படுகிறது.

இவற்றை நாம் கூறும்போது இப்போது திரை விமர்சனமும் எழுத ஆரம்பித்து விட்டீர்களா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இஃது திரை விமர்சனத்துக்கானதல்ல. மாறாக அரசியலின் அதலபாதாளத்தைக் காட்டுகின்ற திரைப்படம் என்பதால் அதனைப் பார்ப்பது நல்லது என்பதற்காக கூறினோம்.

இவை ஒருபுறமிருக்க, எங்கள் தமிழ் அரசியல் தரப்புகளுக்கிடையே குத்து வெட்டுக்கள், கழுத்தறுப்பு நடவடிக்கைகள் ஈவிரக்கமின்றி நடந்தாகின்றன.

அதிலும் குத்துவெட்டுகள் புறத்தில் மட்டுமல்ல. அகத்திலும் நடப்பதுதான் வியப்புக்குரியது.

பொதுத் தேர்தல் நெருங்குகின்ற வேளையில் சேர்ந்தவர்கள் பிரிவதும் பிரிந்தவர்கள் சேர்வதும் வழமை.

ஆனால் எங்கள் தமிழ்க் கட்சிகளுக்கிடையே நிலவுகின்ற குத்து வெட்டுக்களைப் பார்க்கும்போது பொதுத் தேர்தல் முடிந்தாலும் இஃது முடியாதென்று கூறுமளவுக்கே நிலைமையுள்ளது.

கூட்டுச் சேர்வதில் குழப்பம் என்றால் குழப்புவதற்கே ஒரு கூட்டம் தங்கள் அருமந்த நேரத்தை செலவிட்டுக் கொள்கிறது.

ஏன்? எதற்கு? என்ற கேள்விகளுக்கான பதில் இன்னமும் இல்லை.

கட்சிகள் உடைகின்றன. பிரிந்தவர்கள் தனித்து நிற்கவும் துணிந்து விட்டனர்.

ஆனாலும் அனைவரும் சொல்வது தமிழ் மக்களுக்காக என்பதுதான்.

ஓர் இனத்தின் உரிமைக்குக் குரல் கொடுப்பதில் இவ்வளவு வேறுபாடுகளும் ஒற்றுமையீனங்களும் இருந்தால்,

தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பது எங்ஙனம் சாத்தியமாகும்.

அட, இதுதான் என்றால் சில ஊடகங்கள் வெளியிடுகின்ற ஊகங்கள் நிலைமையை மேலும் மோசமாக்கிவிட,

ஒற்றுமைப்பட்டு உரிமை கேட்க வேண்டிய தமிழினம் உரிமைக்காகப் பிரிந்து நின்று பேதமையை வளர்க்கிறது.

இதுவே எங்கள் நிலைமை என்றால் எங்களுக்கு எங்ஙனம் விடிவு கிடைக்கும் என்பது தான் கேள்வி.

## அபிராமிப் பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கம்பனை அருள்மிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் அபிராமிப் பட்டர் விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அம்பாளுக்கு அபிஷேக நிகழ்வுகள் இடம்பெறுவதைத் தொடர்ந்து மாலை சமய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதோடு அதனைத் தொடர்ந்து அம்பாள் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதி உலா வலம் வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ம-3)

## பேருந்தில் 170 கிலோ கஞ்சா! புத்தளத்தில் மூன்றுபேர் கைது

(புத்தளம்)

தனியார் பேருந்தில் இரகசிய முறையில் மறைத்துக் கொண்டுசெல்லப்பட்ட 170 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் புத்தளம் பிரிவினர் நேற்று புதன்கிழமை காலை மேற்கொண்ட இந்த நடவடிக்கையில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், கொடிகாமம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டியில் இருந்து கொழும்புக்குப் பயணித்த தனியார் பேருந்தை, பாலாவி சந்திப் பகுதியில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் பணியக அதிகாரிகள் மற்றும் கடற்படை புலனாய்வு அதிகாரிகள் சோதனை செய்தனர்.

இதன்போது கேரள கஞ்சா சாக்குகளை இரகசியமான முறையில் பேருந்தின் ஆசனங்களுக்கு கீழ் பகுதியில் மறைத்து கொண்டு செல்லப்பட்ட போது அவற்றைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகநபர்களையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் பொலிஸ் போதைப் பொருள் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் படுகொலை

(மஹரகம)

மஹரகம, நாவின்ன பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் நீண்டதில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

இதில் படுகாயமடைந்த நபர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

64 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்காக மிரிஹான பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். (ஐ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 23 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் திருமதி பாமினி சாந்தகுமார், தொழிலதிபர் ஈ.எஸ்.பி நாகரட்ணம், கௌரவ விருந்தினராக இராமநாதன் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

சரியானது என்று உணர்ந்த பின்னும் அதைச் செய்யாமல் இருப்பதுதான் மகா கோழைத்தனம்.
-கன்பூஷியஸ்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம் **P.S.C,** பகல அளுத்வத்த கிராமம், சாளம்பைக்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** தரவன்கோட்டை, சாந்திபுரம், **South bar,** கடலேரி, தள்ளாடி, தள்ளாடி படை முகாம், மாந்தை உப்பு தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சம்பந்தனுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை கோட்டா அரசு மீளப்பெறாது

சபையில் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

ரணில் அரசாங்கத்தினால் இரா.சம்பந்தனிற்கு வழங்கப்பட்ட சலுகைகள் எதையும் தற்போதைய அரசு மீளப்பெறாது என சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இரா.சம்பந்தனிற்கு மட்டுமல்ல, வீ.ஆனந்தசங்கரிக்கும் அரசாங்கத்தினால் வீடொன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்ற அமர்வின்போது, பொது முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கையென குறிப்பிட்டு, தனது சொகுசு பங்களா, பென்ஸ் கார் விவகாரத்தை இரா.சம்பந்தன் எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த தினேஷ் குணவர்த்தன, இரா.சம்பந்தினிற்கு வழங்கப்பட்ட எந்த சலுகையும் மீளப்பெறப்பட மாட்டாது. சம்பந்தனிற்கு தேவையான அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும், பிரதமர் மகிந்த ராஜபக்சவும் அறிவுறுத்தியுள்ளனர் என்றார். (ம-3)

## நாவற்குழியில் வான் விபத்து எட்டு பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த சொகுசு வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை நாவற்குழி பிரதேசத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மூடு பனி காரணமாக வான் புரண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால் வாகனத்தில் பயணித்தவர்களில் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர் கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I,III மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவியிலுள்ளவர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை எதிர்வரும் 25.01.2020 ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல.393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என வடமாகாணப்பொதுச் சேவை ஆணைக்குழுத் தலைவர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (இ)

## சத்திய தரிசனம்

### நல்ல எண்ணம் வேண்டும்



❖ கடவுள் எல்லையற்ற கருணைக் கடலாக இருக்கிறார். எல்லா உயிர்களிலும், பொருட்களிலும் அவர் நிலைபெற்று இருக்கிறார். அவரை அறிந்து கொள்ள எளிய வழி பக்தி ஒன்றே.

❖ பொறியில் சிக்கும் எலி போல, மனிதன் உலகம் என்னும் பொறியில் ஆசை வயப்பட்டு அழிந்து போகிறான்.

❖ மனிதனைத் தாக்கும் ஆயுதம் நாக்கு. நாக்கினால் உண்டான காயம் ஆற நீண்டகாலம் ஆகும். பிறர் மனதை புண்படுத்தும் விதத்தில் பேசக்கூடாது.

❖ பாம்பின் விஷம் நச்சுப்பல்லில் மட்டும் இருக்கிறது. ஆனால், மனித இதயத்தில் தீய எண்ணம் புகுந்து விட்டால் நம் உடல் முழுவதும் நஞ்சு பரவி விடும். எனவே நல்ல எண்ணங்களுடன் வாழுங்கள்.

❖ ஐம்புலன்களின் வாயிலாகவே உலகத்தோடு தொடர்பு கொள்கிறோம். இவற்றை முறையாக பயன்படுத்தாவிட்டால், அவற்றிற்கு அடிமையாவோம்.

❖ தவறு செய்யாத மனிதர் இல்லை. ஆனால், அறிந்தோ அறியாமலோ பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமை மறக்கும் அளவிற்கு தவறு செய்து விடாதீர்கள்.

## விஜயரட்ணம் ஞாபகார்த்த ஞானம்ஸ் பெயின்ட் வெற்றிக்கிண்ணம்

# புற்தரையில் முதன் முதலில் சென்றலைட்ஸ் அணி முதலாமிடம்



ஞானம்ஸ் பெயின்ட் நிறுவத்தினர் முதன் முதலில் புற்தரையில் நடத்திய 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட தொடரில் சென்றலைட்ஸ் அணி 6 போட்டிகளில் பங்கு பற்றி 5 போட்டிகளில் வெற்றியும் ஒரு போட்டியில் தோல்வியும் அடைந்து 24.72 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும், கே.சி.சி.சி. அணி 5 போட்டிகளில் பங்கு பற்றி 3 போட்டிகளில் வெற்றியும், 02 போட்டிகளில் தோல்வியும் அடைந்து 17.86 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும், பற்றீசியன்ஸ் அணி 05 போட்டிகளில் பங்கு பற்றி 03 போட்டிகளில் வெற்றியும், 02 போட்டிகளில் தோல்வியும் அடைந்து 17.46 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும், கிறாஸ்கொப்பர்ஸ் அணி 04 போட்டிகளில் பங்கு பற்றி 01 போட்டியில் வெற்றியும், 03 போட்டிகளில் தோல்வியுமடைந்து 11.51 புள்ளிகளைப்பெற்று 4 ஆம் இடத்திலும், ஜொலிஸ்ரார் அணி 03 போட்டிகளில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றியும், 02 போட்டிகளில் தோல்வியும் அடைந்து 11.33 புள்ளிகளைப் பெற்று 5 ஆம் இடத்திலும், ரி.சி.சி. அணி 03 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றியும் 2 போட்டிகளில் தோல்வியுமடைந்து 8.32 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்திலும், AB அணி 03 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றியும் 2 போட்டியில் தோல்வியுமடைந்து 8.01 புள்ளிகளைப் பெற்று 7 ஆம் இடத்திலும், யாழ்.சென்றல் அணி 03 போட்டிகளில் பங்கு பற்றி 03 இலும் தோல்வி அடைந்து 4.60 புள்ளிகளைப் பெற்று 08 ஆம் இடத்திலுமுள்ளனர். (க)

# இலங்கை அணிக்காக வெண்கலப் பதக்கம் வென்ற சாதனை மாணவி வெண்கரத்தினரால் கௌரவிப்பு



ஆசியளவிலான "கலப்பஞ்சல்" போட்டியில் இலங்கை அணி சார்பில் பங்கேற்று வெண்கலப் பதக்கத்தை பெற்ற பண்டத்தரிப்பு சாந்தையை சேர்ந்த சாதனை மாணவி இந்திரசித்து-தமிழரசி, வெண்கரம் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட பட்டிப் பொங்கல் விழாவின் போது பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

நீச்சல், சைக்கிளோட்டம், மரதன் ஆகிய மூன்று விதமான விளையாட்டுகளை உள்ளடக்கிய கலப்பஞ்சல் போட்டிக்கான இலங்கை அணியில் சைக்கிளோட்ட வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டுக்கான ஆசியமட்ட போட்டியில் பங்கேற்று வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்த வெண்கரம் அமைப்பின் சாந்தை-சில்லாலை படிப்பக மாணவியான தமிழரசியின் சாதனையை பாராட்டி பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டிருந்ததுடன் சிறு தொகை பணப்பரிசும் ஊக்குவிப்பு பரிசாக வழங்கப்பட்டிருந்தது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட சைக்கிளோட்டப் போட்டிகளில் பங்கேற்று 2016 ஆம் ஆண்டில் 6 ஆவதாகவும், 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் 5 ஆவதாகவும், 2019 இல் 9 ஆவதாகவும் வந்திருந்த தமிழரசி 2018 ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட சகல பிரிவினருக்குமான சைக்கிளோட்டப் போட்டியில் பங்கேற்று தங்கப் பதக்கத்தினையும், 2019 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட சகல பிரிவினருக்குமான சைக்கிளோட்டப் போட்டியில் பங்கேற்று வெண்கலப் பதக்கத்தினையும் கைப்பற்றியுள்ளார். (க)

# வவுனியா மாவட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கூமாங்குளம் சுப்பர் ஸ்ரார் தேசிய போட்டிக்கு தெரிவு



வவுனியா மாவட்ட கரப்பாந்தாட்ட போட்டியில் கூமாங்குளம் சுப்பர் ஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று தேசிய போட்டிக்கு தெரிவு.

வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்ப்பாட்டில் வவுனியா மாவட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான போட்டியில் கூமாங்குளம் சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. தரணிதீபம் விளையாட்டுக்கழகமும் கூமாங்குளம் சுப்பர் ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கும் கடந்த 18 ஆம் திகதி வவுனியாவில் இறுதி கரப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

இப் போட்டியில் தரணிதீபம் விளையாட்டுக்கழகத்தினை 3:2 புள்ளிகள் வித்தியாசத்தில் கூமாங்குளம் சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று தேசிய ரீதியில் நடைபெறும் கரப்பந்தாட்ட போட்டிக்கு தெரிவாகியது. இவர்கள் தொடர்ச்சியாக பல போட்டிகளில் வெற்றிபெற்று தேசிய ரீதியில் நடைபெறும் கரப்பந்தாட்ட போட்டிக்கு தெரிவாகியிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-299)

# பலாலி விண்மீன் வீரர்களின் வீரதீர சாகச நிகழ்வுகள்







பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக வீரர்களின் வீர தீர சாகசச் செயல்கள் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மினிவானை மார்பின் மேல் ஏற்றல், தொடர்ச்சியாக 60 தடவைகள் 160 0கிலோகிராம் எடையுள்ள உழவியந்திரங்களை மார்பின் மேலாக ஏற்றல், காற்று உட்புக முடியாத மூன்றடி ஆழமான நெருப்புப் புதைகுழியினுள் ஒரு மணி நேரம் படுத்திருத்தல், ஆட்கள் நிறைந்த உழவியந்திரத்தை மார்பின் மேலாக ஏற்றுதல், ஒரே நேரத்தில் இரண்டு உழவியந்திரங்களை உடலின் மீது எதிர் எதிராக ஏற்றுதல், தலைமுடி மற்றும் தாடியினால் ஹயஸ் வாகனத்தைக் கட்டி இழுத்தல் மற்றும் பாரிய கருங்கல்லை மார்பில் வைத்து இரும்பினால் உடைத்தல் ஆகிய வீர தீரச் செயல்களை விண்மீன் விளையாட்டுக் கழக வீரர்கள் நிகழ்த்தி இருந்தனர். கரணம் தப்பினால் மரணம் என்ற இந்த வீர தீரச் செயல்களை பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வி.விஜிதரன், அ.ஜெயதாஸ், ஜெ.ரேகன், வினுராஜ் மற்றும் திருச்செல்வம் ஆகியோர் நிகழ்த்தி இருந்தனர். இவர்களுடன் பயிற்றுவிப்பாளர்களான சாண்டோ ஜே.ரவி மற்றும் வின்சன் ஆகியோரும் பங்கு பற்றி இருந்தனர். (க-30)



தேசிய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த 18,19, 20 ஆம் திகதிகளில் நாவலப்பிட்டியில் இடம்பெற்றது. இதில் பங்குகொண்ட அல்லைப்பிட்டி றோ.க.த.க. வித்தியாலயத்தின் தரம் 4 மாணவர்கள் தங்க விருதையும் தரம் 5 மாணவர்கள் வெள்ளி விருதையும் தரம் 3 மாணவர்கள் வெண்கல விருதையும் பெற்றுச் சாதனை படைத்தனர். வெற்றிவாகை சூடி வந்த மாணவர்கள் பாடசாலை சமூகத்தினரால் அல்லைப்பிட்டி பராசக்தி மாணவர்களின் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

## நோர்வே தூதரக அதிகாரிகள்...

ஆளுநருக்கு தமது விசேட வாழ்த்துக்களை தெரிவித்தார். இதன் போது நோர்வே அரசால் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள் தொடர்பிலும், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட இருக்கும் திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

இச் சந்திப்பின்போது எமது மக்களிடம் மேம்படுத்தப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் தொடர்பில் குறிப்பிட்ட வடக்குமாகாண ஆளுநர் மின்சார கட்டணங்கள் காரணமாக பல உள்ளூர் உற்பத்தி முயற்சிகள் பின்னடைவை கண்டுவரும் இக்காலகட்டத்தில் நோர்வே அரசால் அறிமுகப்படுத்தப்பட இருக்கும் சூரிய சக்தியை கொண்டான மின் உற்பத்தி செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து மக்களுக்கு பரிந்துரைக்க கூடியதாக இருக்கும் என்றும் வடக்கின் சிறப்பான பாரம்பரிய உற்பத்திப் பொருட்களுக்கான சிறந்த சந்தை வாய்ப்பை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெற்றுக்கொள்வதற்க்கான தொழிநுட்ப அறிவை மேம்படுத்துவதற்கும் சர்வதேச சந்தைப்படுத்தலுக்கான தொடர்புகளை பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைப்புகளுக்கும் நோர்வே அரசு தமக்கு உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது மீன்பிடித்துறை மற்றும் சுற்றுலாத்துறையில் வடக்கு மாகாணத்தில் பல அபிவிருத்திகள் மேம்படுத்தக்கூடிய வாய்ப்புகள் குறித்தும் அதற்ககான ஒத்துழைப்புகளை பெறும் வழிவகைகள் தொடர்பில் நோர்வே தூதுவரிடம் கலந்தாலோசித்தார்.

குறிப்பாக பெண்களின் மேம்பாட்டுக்காக தான் அறிமுகப்படுத்திய திட்டங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம் எஸ்.சார்ள்ஸ் குறிப்பிட்டபோது அதனை பாராட்டிய தூதுவர் மேலும் பல திட்டங்கள் தொடர்பிலான திட்ட முன்மொழிவுகளை பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் வேறு பல சர்வதேச அமைப்புக்களுக்கும் அவற்றை பரிந்துரைத்து வடக்கின் ஆளுநரின் பணிகளுக்கு உதவக் கூடியதாக இருக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

இச்சந்திப்பின் போது நோர்வே தூதுக்குழுவினருடன் ஆளுநரின் செயலாளர், இணைப்புச் செயலாளர் மற்றும் ஊடகச் செயலாளரும் பங்கேற்றிருந்தனர். (ம-3)

## பாராளுமன்...

மாலை 6.00 மணிக்கு முன்னதாகக் கையளிப்பதாக உறுதியளித்திருந்த நிலையிலேயே அவர் இவற்றை பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ளார். (ம-3)

## காணாமல்...

10 ஆண்டுகளாகியும் தனது மகன் வருவார் என்ற நம்பிக்கையில் போராட்டங்களிலும் விசாரணைகளிலும் கலந்து கொண்டு தனது மகனைதேடி வந்தார்.

இந் நிலையில் கடந்த சில மாதங்களாக சுகவீனமுற்று இருந்த நிலையில் நேற்று குறித்த தந்தை உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கடந்த இருநாட்களில் திருகோணமலையை சேர்ந்த ஒரு தந்தையும் கிளிநொச்சியை சேர்ந்த தாயார் ஆகிய இருவரும் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## 19ஆவது திருத்...

டத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முழுமையான அதிகாரம் கொண்ட ஒருவராகத்தான் இருந்தார்.

இதன் ஊடாக, அவர் நீதிமன்றங்களுக்குக் கூட அழுத்தம் பிரயோகிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். இதனை இல்லாது செய்யும் நோக்கில்தான் நாம் 19 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம்.

அதில், ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன, அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன, சுயாதீன ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்த சட்டமூலம் தொடர்பாக ஒரு நாள் முழுவதும் பாராளுமன்றில் விவாதம் நடைபெற்றது. அனைவரின் ஒப்புதலுடன்தான் இது நிறைவேற்றப்பட்டது.

இந்தநிலையில், தற்போது இதனை ஏன் எதிர்க்கிறார்கள் என்று தெரியவில்லை. அதே நேரம், தங்களின் வேலைத் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என அரசாங்கம் தற்போது கூறிக்கொண்டிருக்கிறது.

அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறைக்கவும், ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்கவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையில்லை.

எமது 100 நாள் அரசாங்கத்தின்போது நாம் பாரிய வேலைத் திட்டங்களை செய்திருந்தும், இந்த அரசாங்கம் இன்று தடுமாற்றத்துடன்தான் ஆட்சி செய்து வருகிறது என்றார். (ம-3)

## இராணுவச் சிப்பாயால் கழுத்தறுத்து...

குறித்த சம்பவம் நேற்று புதன் கிழமை மதியம் 2.30 மணியளவில் மக்கள் நடமாட்டம் உள்ள பண்ணை கடற்கரையில் இடம் பெற்றுள்ளது.

இதில் களுத்துறை பேருவளையைச் சேர்ந்த யாழ் மருத்துவபீட இறுதியாண்டு மாணவியான

எச்.டி.ஆர். ஹன்சனா (வயது-29) என்பவரே மேற்படி படுகொலை செய்யப்பட்டவராவார். குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்,

கிளிநொச்சி - பரந்தன் இராணுவ முகாமில் மருத்துவப்பிரிவில் பணியாற்றும் இராணுவ சிப்பாயும் குறித்த மாணவியும் நேற்று பண்ணைக் கடற்கரைக்கு சென்றுள்ளனர்.

இருவரும் வடை வாங்கிக் கொண்டு கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நிலத்தில் இருந்து கதைத்துக்கொண்டிருந்துள்ளனர். இதன் போது திடீரென குறித்த மாணவியின் கழுத்தின் பின் பக்கமாக குறித்த நபர் கத்தியால் வெட்டியுள்ளார் பின்னர் மாணவியை கடலுக்குள் தள்ளி விட்டு அந்த இடத்தை விட்டு சென்றுள்ளார்.

சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் கூடியிருந்த உள்ளூர் இளைஞர்கள் கொலையாளியைப் பின்தொடர்ந்து சென்றதுடன், அவர் பேருந்தில் ஏற முற்பட்ட போது அவரை துரத்திப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் பேருவளையை சேர்ந்த எரங்க திலீப் குமார (வயது 30) என பொலிஸார் தெரிவித்துள்ளனர்

கொல்லப்பட்ட மாணவிக்கும் கொலையாளிக்கும் மூன்று வருடங்களுக்கு முன்னர் பதிவுத் திருமணம் இடம்பெற்றுள்ளது என்று ஆரம்ப விசாரணைகளின் பின்னர் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கொல்லப்பட்ட மாணவி இன்னும் ஒரு மாதத்தில் இடம் பெறவிருந்த மருத்துவத்துறை இறுதிப் பரீட்சைக்கு தோற்றவிருந்தார் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகவல்கள் தெரிவித்தன.

வேறு நபர் ஒருவருடன் சேர்ந்து மாணவி எடுத்துக்கொண்ட ஒளிப்படங்கள் சில கிடைத்தன. அவை தொடர்பில் இருவருக்கும் ஏற்பட்ட முரண்பாட்டில்தான் அவரைக் கொலை செய்தேன் என்று கொலையாளி பொலிஸாரிடம் தெரிவித்தார். (ம-3,9,10,18,30,101,114)

## பேருந்துக்காக...

பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை காலை 7.00 மணியளவில் பூநகரி, பள்ளிக்குடா பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பூநகரியில் இருந்து பருத்தித்துறைக்கு வருவதற்காக காலை நேரம் பள்ளிக்குடா பகுதியிலுள்ள பஸ் தரிப்பிடம் ஒன்றில் மேற்படி பெண்மணி நின்றுள்ளார்.

அச்சமயம் கார் ஒன்றில் வந்தவர்கள் காரை நிறுத்திவிட்டு முகங்களை முகமூடி அணிந்து மறைத்தவாறு காரிலிருந்து இறங்கி பெண்மணியின் கழுத்தில் நீளமான கத்தி ஒன்றினை வைத்து அச்சுறுத்தி அவரிடமிருந்த பத்தரை பவுண் நிறையுடைய தாலிக் கொடியை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ம-3,60)

## கத்திக்குத்து காய...

வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த இ.குபேந்திரன் (வயது- 56) என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயம்ஒன்றுக்கு பூசை வைத்து வரும் அவர் நேற்று புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அப்பகுதியில் கத்திக்குத்து காயங்களுடன் சடலமாக காணப்படுவதாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனை அடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் இச்சம்பவம் தொடர்பில் அவரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் தன்னை வன்புணர்வதற்கு வந்ததாகவும் தன்னைப் பாதுகாப்பதற்காக அவரை தாக்கியதாகவும் அந்தப் பெண் வாக்குமூலம் வழங்கினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,30,60,114)

## இலங்கைக்கு எதிரான ஐ.நாவின்...

போதும் அங்கீகாரம் வழங்க முடியாது என்றும் கூறினார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 40 ஆவது கூட்டத் தொடர் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்றது.

இக்கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை கொண்டு வந்து அதனூடாக இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவித்தல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் இணையனுசரனை வழங்கிய நாடுகள் குறிப்பிட்டன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 41 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இம்முறை இலங்கை தொடர்பிலும், புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்தும் புலம் பெயர் அமைப்புக்கள் பல அழுத்தங்களை பிரயோகிக்கவுள்ளதாகவும் அறிய முடிந்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் அடிப்படை காரணிகள் ஏதுமின்றி 2015ஆம் ஆண்டு 30 (1) பிரேரணைக்கு இணையனுசரனை வழங்க இணக்கம் தெரிவித்தமை முதல் தவறாகும்.

இத்தீர்மானத்திற்கு அப்போதைய வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்த மங்கள சமரவீர ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்திற்கு அறிவிக்காமலும், அனுமதி பெறாமலும் தான்தோன்றித்தனமான தீர்மானங்களையே மேற்கொண்டார்.

நாட்டுக்கு எதிரான தீர்மானங்கள் வெற்றிபெறுவதற்கும், அதனை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கும் ஒருபோதும் இடமளிக்கவோ, ஆதரவு வழங்கவோ முடியாது என 2015ம் ஆண்டில் இருந்து எதிர்க்கட்சியினர் என்ற அடிப்படையில் கடுமையான எதிர்ப்பினை தெரிவித்தோம்.

இன்று ஆளும் தரப்பினராக செயற்படும் போது எமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை என்றும் கூறினார். (ம-3)


அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 860
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.01.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,000,000/-
வெற்றி இலக்கங்கள் 47 58 69 76
ஆங்கில எழுத்து E

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3291 திகதி: 2020.01.22
வெற்றி இலக்கங்கள் 14 53 59 68 V
விசேட இலக்கம் 8672
அடுத்த ஜக்பொட் 38,720,760/-
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 22.01.2020 வெற்றி வாரம் 2746 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் துலாம் 43 49 55 59
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000
2020/01/23ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 316
சீட்டிழுப்பு திகதி 22.01.2020 நீலம்
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 44 45 62 விதி எண் 8
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.50,445,668
2020/01/24ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 22-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2369
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 40 61 62 64
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/01/2020
சீட்டிழுப்பு இலக்கம் 488
Q 06 08 41 65 75

தன நிதானய
திகதி - 2020.01.22
சீட்டிழுப்பு இலக்கம் - 255
S 03 06 10 38

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/01/2020
சீட்டிழுப்பு இலக்கம் 1011
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 8 4 2 0 9 9
தேசிய லொத்தர் சபை

# வடக்கு ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக தொண்டர் ஆசிரியர்கள் நேற்று போராட்டம்

(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி நிரந்தர நியமனம் கிடைக்கப்பெறாத 300க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த அரசாங்கத்தின்போது வழங்கப்பட்ட நியமனத்தின் போது தாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், தமக்கான நியமனத்தை விரைவில் பெற்றுத் தர வேண்டும் என கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்கள் வலியுறுத்தினர். (ம-3)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623 (1937)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/= Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS (C-8785)

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப்போகின்ற அனைத்து விடயங்களையும் மிக வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்) (C-9036)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2020 யூலை பரீட்சைக்கான
aat (Sri Lanka)
(aat1, aat2, aat3)
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium:- Tamil & English
ஆரம்பம்:- 01.02.2020
Jaffna College undergraduate Dept. (9032)
464, Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149

கனேடிய சுற்றுலா விருந்தோம்பல் கற்கை நிலையம்
Hotel Management
ஆரம்பம்: 25.01.2020
100% வேலைவாய்ப்பு
வெளிநாட்டில் உயர் கல்வி
ஸ்கில் மைகிரேசன் வாய்ப்பு
0213146171, 0760579999
No.1544, K.K.S Road, Jaffna.
CTHI (C-9036)

கனடாவில் வேலைவாய்ப்பு/உயர்கல்வி
யாழ் சர்வதேச கண்காட்சியில் STALL NO C-11
3 year work permits / குடும்பத்துடன் நிரந்தரமாக தங்கலாம்
Home support worker - வருடத்திற்கு 2500 வீசா வாய்ப்புக்கள்
Home child care provider - வருடத்திற்கு 2500 வீசா வாய்ப்புக்கள்
அடிப்படைக்கல்வித்தகுதி :- A/L
● வயதெல்லை :- 19 முதல் 50 வரை
24,25,26 திகதிகளில் வெள்ளி,சனி,ஞாயிறு
Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
(MBA,B.Eng) - RCIC # 519684
Member of Immigration Consultants of Canada Regulatory Council
Member of Canadian Association of Professional Immigration Consultants (C-9038)
CANADA MIGRATION PILOT
V2 Travels
இல16/1,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
0768226243

வீட்டுப் பணிப்பெண் தேவை
இணுவிலில் அமைந்துள்ள வீடொன்றில் பணியாற்றுவதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (1955)
தொடர்புகளுக்கு: 077 401 6412

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
A/L 2020 மாணவர்களுக்கான
ICT Maths(7) Agri Geography Media
வினாத்தாள் வகுப்புக்கள் ஆரம்பம்
25.01.2020 சனிக்கிழமை
077 848 7774

காணி விற்பனைக்கு
மல்லாகத்தில் 7ஆம் கட்டை ஒழுங்கையில் காங்கேசன்துறை வீதிக்கு அருகாமையில் நி.பரப்பு 4 குளி 3.23 உடனடியாக விற்பனைக்குண்டு. (1966)
தொடர்புகளுக்கு: 077 331 1137

வாடகைக்கு
யாழ்.ஆஸ்பத்திரி Staff Gateக்கு முன்பக்கமாக அறை வாடகைக்கு உண்டு. படிக்கும் மாணவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் பெண்கள் விரும்பத்தக்கது (1954)
தொடர்புகளுக்கு: 0772990127

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/= ஜேர்மனி - 640/= இத்தாலி - 690/=
கனடா - 950/= நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-9015)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

Oblate Institute for Higher Education
De Mazenod Campus (DMC)
அமல மரித்தியாகிகளின் (OMI Fathers) உயர் கல்வி நிலையம் நடாத்தும் கற்கைநெறிகள்
Diploma in English from Basic Level to Diploma Level
(ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி)
In Affiliation to Aquinas University College, Colombo
(கொழும்பு அக்குவாஸ் பல்கலைகழகத்தின் அனுமதி பெற்றது)
Diploma in Sinhala from Basic Level to Diploma Level
(சிங்கள டிப்ளோமா கற்கைநெறி)
Computer Assistant
(தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர் சான்றிதழ்)
(NVQ Level 3/4)
Accountant Assistant/ Business Associate
(கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ்)
(NVQ Level 3/4)
Quantity Surveying
(கணிய அளவை உதவியாளர் சான்றிதழ்)
(NVQ Level 3/4 leads to NVQ Level 5)
Civil Engineering
(தொழில் நுட்பவியலில் தேசிய சான்றிதழ்) (1967)
விண்ணப்ப முடிவுத் திகதி 31.01.2020
தொடர்புகளுக்கு:- T.P. 077 67 67 662, 021 222 2721
வகுப்புகள் வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் நடைபெறும்
க.பொ.த, சாதாரண தர, உயர்தர (O/L, A/L) பரீட்சை எழுதிய மாணவர்கள் முதல் அனைத்துத் தரப்பினரும் இவ் கற்கை நெறிகளை மேற்கொள்ள முடியும்
விண்ணப்ப படிவங்களை தொடர்பகம், 657/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் - பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
Jaffna International Trade Fair
11th EDITION
www.jitf.lk jitf.lk
JITF 2020
24 25 26
வாருங்கள்! நாளை தொடங்குகிறது
ஜனவரி January
10.00 am - 8.00 pm முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)
PLATINUM SPONSOR: INSEE CEMENT
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY
More information: Imalka +94 71 7488107 | imalka@saexhibitions.com
OFFICIAL PARTNERS: DSI, British Cosmetics, DIMO
ENDORSED & SUPPORTED BY
PARTNER COUNTRY: India
(C-8950)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.